# காந்தி மலர்

இந்து இளைஞர் கழகம்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,

**10 - 10 - 1969.**

''அவர் மாபெருஞ் சக்தி ஒன்றின் ஊர்தியாகவும், உருவாகவும் விளங்குகின்ருர். அந்தச் சக்தியின் பரிபூண தன்மையையும் அவராலே கூட முழுமையாகவும் தெளிவாகவும் சொல்லுதலோ, வெளிக்காட்டுதலோ இயலாத காரியமாகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் எமதினத்தின் பின்னணியிலே தேக்கி வைக்கப்பட்டனவும், சித்திரவதை செய்யப்பட்டனவுமாகிய ஆன்மாக்களின் கூட்டுப்பரிமாண சக்திதானே அது?''
— நேரு.

# மகாத்மாவின் மணிமொழிகள்

* மானிடம் ஒரு மகாசமுத்திரம் அதில் விழுகின்ற ஒரு சில அழுக்குத் துளிகளால் மகாசமுத்திரமே அழுக்காவதில்லை.

* நாம் சத்தியத்தில் உறுதியாக இருப்போமானல், சட்டம் இயல்பாகவே எமக்கு வழிகாட்ட முன்வரும்.

* கோழையான ஆசிரியர் தம் மாணவர்களை வீரர்களாக்குவதில் வெற்றிபெற மாட்டார்.

* உண்மை வழியிலே உறுதியாய் நிற்றலே சத்தியாக்கிரகம்.

* தீமைக்கு எதிராய் நன்மை செய்வதிலேதான் உண்மையான அழகு உள்ளது.

* வெறுப்போ, கோபமோ இன்றி ஒரு சகோதரன் கையாலே சாகக்கிடைப்பது, துன்பம் தருவதன்று.

* உடன்படிக்கை செய்து கொள்கிறேம் என்ற உணர்வோடு செய்யப்படாத உடன்படிக்கை, உடன்படிக்கையேயன்று.

* நாம் இறந்தோர்க்காகப் பாடுபட வேண்டியதில்லை இருப்பவர்க்கே பணி புரிதல் வேண்டும்.

* தமக்குச் சரி என உள்ளம் சொல்லும் வழியிலே சத்தியத்தைக் கடைப்பிடிப்பதிலே தவறில்லை. அதுவே ஒவ்வொருவரதும் கடமையாகும்.

* ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ளும், புறமுமாய் ஏற்படும் இன்னல்களிலிருந்து அவர்களைக் காத்தலே அஹிம்சையாகும்.

* சத்தியம் அஹிம்சையின் வலிய பக்கமெனில், அன்பு அதன் மென்மையான பக்கமாகும்.

* அஹிம்சை என்பது மனப்பூர்வமாகத் துன்பத்தை ஏற்றலே.

* மகிழ்ச்சி, மற்றவர்க்குத் துன்பத்தை ஏற்படுத்துவதால் உண்டாகாது. மற்றவர்க்காக வருத்தத்தை முழுமனத்தோடு ஏற்பதாலேயே உண்டாகும்.

உ

# காந்தி மலர்

10 - 10 - 1969

## பொருளடக்கம்


1. சமர்ப்பணம் — இ. இ. க. செயலர் ... ... 2
2. வாழ்த்துச் செய்திகள்
   (i) திரு. எஸ். ஹண்டி பேரின்பநாயகம் ... 3
   (ii) கல்லூரி அதிபர் ... ... 4
3. தொலைந்த விளக்கினைத் தேடுவோம் — ஆசிரியர் ... 5
4. காந்தி அஞ்சலி
   (i) கவிதைகள் ... ... ... 6
   (ii) துன்ப உரைகள் ... ... ... 7
5. காந்தியடிகளின் வாழ்க்கைப்படிகள் — கலைக்கதிர் ... 9
6. மகாத்மாவைப் போற்றிய மாண்பாளர் ... ... 13
7. தொன்று நிகழ்ந்தது
   (i) இவர் யாரோ? — A. இராமநாதன் ... 13
   (ii) Gandiji at Jaffna Hindu College — T. Poopalarajah ... 14
8. Extracts from Gandiji's Speech at a Meeting of the Hindus of Jaffna... 15
9. சத்தியசந்தர் — பொ. இரகுபதி ... ... 16
10. ஆண்டவன் ஒருவனே — "சோனு" ... ... 18
11. பரிசுக் கட்டுரைகள்
    1. மகாத்மாவின் இளமைப் பருவம் — ந. சத்தியதாசன் ... 20
    2. அஹிம்சையும் சகிப்புத் தன்மையும் — ஐ. எம். நகீப் ... 22
    3. மகாத்மாவின் போதனைகளே...... — K. சுசானந்தன் ... 23
12. முயன்று பாருங்கள் ... ... ... 25
13. ஒற்றுமை கண்டு மகிழுங்கள் — தொகுப்பு:- திரு. க. செல்லத்துரை 28
14. காந்தி நூற்றாண்டு விழா — பேச்சுப் போட்டி ... 33
15. அண்ணல் காந்தியும் அஹிம்சாதர்ம வாழ்வும் — ச. சிவகுமாரன் 34
16. மகாத்மாவின் வாழ்விலே...... ... ... 36
17. ஆன்றோர் கூறும் உண்மை ... ... 39
18. மகாத்மாவைக் கவர்ந்த மூன்று நூல்கள் — "தேனீ" ... 40
19. அன்னை கஸ்தூரிபாவின் அரும்பணி ... ... 42
20. மகாத்மாவின் அறிவுரைகள் — தொகுப்பு திரு. சி. பரமானந்தம் 44
    (i) பிரம்மச்சரியம் (ii) தீண்டாமை (iii) புலனடக்கம்
    (iv) சமூகம் — தொகுப்பு:- திரு. ஐ. பொன்னம்பலம் ... 46
21. காந்தியின் நகைச்சுவை ... ... ... 47
22. "Characteristic, Inimitable, Toothless Smile" — Sri. S. Balasubramaniam. 48
23. நன்றி நவிலல், முயன்று பாருங்கள் (விடை) ... ... 50

உ

# சமர்ப்பணம்

மகாத்மா காந்தியின் நூற்றுண்டு விழா உலகெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படும் இவ்வேளையில், அவரின் புனிதநினைவினை மாணவராகிய நாம் எம் உள்ளங்களிலே நிலையாகப் பதித்து வைத்தற் பொருட்டு, இந்து இளைஞர் கழகம், 'காந்தி மலர்' ஒன்றினை, இன்று வெளியிடுகின்றது.

இம்மலர் என்றும் மணமுடையதாக நின்று நிலவப் பலவகையிலும் உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர் யாவர்க்கும் எமது கழகத்தின் நன்றி உரியதாகுக. குறுகிய காலத்தில் இதனை அழகிய முறையிலே அச்சிட்டுதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தார்க்கும் நன்றியுடையோம்.

காந்தியடிகளின் சத்திய வாழ்வையும், மனித குலத்திற்கு அவர் ஆற்றிய பலதிறப்பட்ட பணிகளையும் இரத்தினச் சுருக்கமாக மாணவர்களும், ஆசிரியர்களும் இம்மலரிலே கட்டுரை, கவிதை வடிவங்களிலே தந்துள்ளார்கள். அவை மிகப் பயனுடையவை. அவற்றைப் படித்துப் பயன் செய்ய வேண்டுவது மாணவர் அனைவரதும் கடமையாகும்.


காந்தியடிகள் சத்தியத்தையே கடவுள் வடிவிற் கண்ட பெருந்தகை; பகைவனுக்கும் அருள் சுரந்த பண்பாளர்; மனித இனமாகிய பேராழியிலே தாம் ஒரு துளியே எனக் கருதி மிகுந்த தன்னடக்கத்தோடும், எளிமையோடும் வாழ்ந்து காட்டிய மாபெருந்தலைவர். அவரின் அறிவுரைகள் மனித சமுதாயத்தை மேனிலைக்கு ஏற்றி வைத்திடும் ஏணிப்படிகள். இவ்வுண்மையினை உணர்ந்து காந்தீய நெறியினை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற மனமொழி மெய்களால் முயலல் வேண்டும்.

இம்முயற்சியின் முதற்படியாக வெளியாகும் இம்மலரினை, அமரர் காந்தியடிகளின் புனிதத் திருவடிகளுக்குச் சமர்ப்பிப்பதில், இந்து இளைஞர் கழகம் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றது.

வணக்கம்.

ம. சிவகுமாரன்
செயலர்
இந்து இளைஞர் கழகம்

யாழ். இந்துக் கல்லூரி,
10-10-69.



# பிரார்த்தனை

1. ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன ஸீதா ராம்
பஜமன ப்யாரே ராம ரஹீம்
பஜமன ப்யாரே கிருஷ்ண கரீம்
ஈச்வர அல்லா தேரே நாம்
ஸப்கோ ஸன்மதி தே பகவான்

2. ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜயராம
ஜய ராம ஜய ராம ஜய ஜயராம

3. ஹரே ராம ஹரே ராம ஹரே ராம ஹரே
பஜமன நிசிதின ப்யாரே

4. ராஜா ராம் ராம் ராம்
ஸீதா ராம் ராம் ராம்

5. ஸ்ரீ கிருஷ்ண கோவிந்த ஹரே முராரே
ஹேநாத நாராயண வாஸு தேவா

6. நாராயண நாராயண ஜய கோவிந்த ஹரே
நாராயண நாராயண ஜய கோபால ஹரே

7. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

yours
மோ. க. காந்தி

# சமர்ப்பணம்

மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா உலகெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படும் இவ்வேளையில், அவரின் புனிதநினைவினை மாணவராகிய நாம் எம் உள்ளங்களிலே நிலையாகப் பதித்து வைத்தற் பொருட்டு, இந்து இளைஞர் கழகம், 'காந்தி மலர்' ஒன்றினை, இன்று வெளியிடுகின்றது.

இம்மலர் என்றும் [illegible] பலவகையிலும் உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர் யாவருக்கும் எமது கழகத்தின் நன்றி உரியதாகுக. குறுகிய காலத்தில் இதனை அழகிய முறையிலே அச்சிட்டுதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தார்க்கும் நன்றியுடையோம்.

காந்தியடிகளின் [illegible]திற்கு அவர் ஆற்றிய பலதிறப்பட்ட பணிகளையும் இரத்தினச் சுருக்கமாக மாணவர்களும், [illegible] வடிவங்களிலே தந்துள்ளார்கள். [illegible] அவற்றைப் படித்துப் பயன் செய்ய வேண்டுவது மாணவர் அனைவரதும் கடமையாகும்.

காந்தியடிகள் சத்தியத்தையே [illegible] பெருந்தகை; பகைவனுக்கும் அருள் சுரந்த பண்பாளர்; மனித இனமாகிய பேராழியில் [illegible] தன்னடக்கத்தோடும், எளிமையோடும் வாழ்ந்து காட்டிய மாபெருந்தலைவர். அவரின் அறிவுரைகள் மனித சமுதாயத்தை மேனிலைக்கு ஏற்றி வைத்திடும் ஏணிப்படிகள். இவ்வுண்மையினை உணர்ந்து காந்தீய நெறியினை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற மனமொழி மெய்களால் முயலல் வேண்டும்.

[illegible]னை; அமரர் காந்தியடிகளின் புனிதத் திருவுருவங்களுக்குச் சமர்ப்பிப்பதில், இந்து இளைஞர் கழகம் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றது.

வணக்கம்.

யாழ். இந்துக் கல்லூரி,
10-10-69.

ம. சிவகுமாரன்
செயலர்
இந்து இளைஞர் கழகம்



Yours
മോ. ക. ഗാന്ധി

## திரு. எஸ். ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

உங்கள் முயற்சி போற்றற்குரியது. காந்தியடிகளின் செல்வாக்கு எப்போதாவது மறைந்து விடுமென்று எண்ணுவதற்கில்லை. அவர் உணர்ந்து கூறிய உண்மைகளின் நுட்பம் நாளடைவிலேதான் நிறைந்த பயனை அளிக்கும். மெய்ஞ்ஞானம் நத்தை வேகத்திற்றான் மக்கள் மனத்திற் பதியும். ஆகையால், காந்தியடிகளின் உள்ளக் கிடக்கையைக் கடைப்பிடிப்போர் மனம் சோராது பணிசெய்து கிடப்பதே கடன்.

''அமிர்தம்''
மானிப்பாய்,
9-10-69.

ச. பேரின்பநாயகம்

# கல்லூரி அதிபரின் வாழ்த்துரை

காந்திஜி பற்றிய பேச்சுக்களும், எழுத்துக்களும், தொடரான பல நூற்றுண்டு விழாக்களும் கருத்துடையனவா என்று அடிக்கடி நான் ஐயப்படுவதுண்டு. எனினும் காந்திஜி உபதேசித்த ஒழுக்க நெறிகள், மனிதகுலத்திடையே — சிறப்பாக இளைஞரிடையே — மீண்டும் பரவி நன்னெறி ஒழுகச் செய்யும் என்பதில் நான் முற்றாக நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

நாற்பத்திரண்டாண்டுகளுக்கு முன்பு மகாத்மா எமது கல்லூரிக்கு வருகை புரிந்த காட்சிகளைப், பெருமிதத்தோடும், அடக்க உணர்வோடும் நினைவு கூர்கின்றேன். பிரார்த்தனை மண்டபத்திலே உயர்பீட மொன்றில் மடிகாலிட்டமர்ந்தவாறு இடையிடையே தமது வாழ்க்கைத் துணுக்கைகளையும் கலந்து அவர் உரையாற்றினார். பாடசாலையிலே அவர் 'கொப்பி' யடிக்கும் கலையிலே பயிற்சி பெற்றதில்லை. மேற்பார்வையாளர் 'கெற்றில்' என்ற சொல்லைக் 'கொப்பி' அடிக்கும்படி, தூண்டியபோதும் அவர் அதைச் செய்யவில்லை. வீட்டாரிடம் விசேட அநுமதி பெற்று அவர் பார்த்த அரிச்சந்திர நாடகம் அவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதால், பலமுறை அந்நாடகத்தினைத் தாமே நடித்துப் பார்த்தார். அவர் விளையாட்டுக்களைச் சிறப்பாக உதைபந்தாட்டம், 'கிறிக்கெற்' முதலியவற்றை விரும்பியதில்லை. காரணம் அவரின் கூச்ச உணர்வே. ஆனால் பிற்காலத்தில் உளப்பயிற்சி போலவே, உடற்பயிற்சியும் பாடசாலை மாணவர்க்கு அவசியமானதே என்பதை அவர் உணர்ந்தார். கையெழுத்து, கல்வி வளர்ச்சிக்கு வேண்டியதன்று எனவும் அவர் பிழையான கருத்துக் கொண்டிருந்து, இங்கிலாந்து சென்றபோது அதை மாற்றிக் கொண்டார்.

காந்திஜியின் பாடசாலை நினைவுகளில் மிக முக்கியமானது, ஆங்கில மொழி மூலம் கேத்திர கணிதத்தைக் கற்பதில் ஏற்பட்ட இடர்ப்பாடாகும். அவரின், கணித ஆசிரியர் திறமை வாய்ந்தவராயிருந்தும் பிறமொழி மூலம் கற்பது காந்திஜிக்குக் கடினமாகவேயிருந்தது. பேர்சிய, சம்ஸ்கிருத மொழிகளைக் கற்பதிலும் இதே தடை அவருக்கு இருந்து வந்தது. எந்தப் பாடத்தையும் தாய்மொழி வாயிலாகக் கற்பதே, அதிலே திறமைபெற வழியென்பது அவரின் உறுதியான முடிவாகும். இவ்வாறு கற்பது, கல்வியை ஓர் அலுப்புத்தரும் முயற்சியாக்காது, மகிழ்ச்சிதரும் அநுபவமாய் ஆக்கிவிடும்.

மகாத்மாவின் வாழ்வுயர்வு, அவரின் இளமை வாழ்வினையே அடிநிலையாய்க் கொண்டதெனலாம். உண்மையை நாடும் அவரின் முயற்சி அன்போடும், துணிவோடும் பிணைக்கப்பட்டிருந்தது. இப் பிணைப்பும், சத்திய நாட்டமுமே மனித இனத்தின் பலவகை அடிமைத் தனங்களினின்றும் அதனை விடுவிக்கும் பெருந்தகையாளராய் அவரை வளர்த்தன.

இச் செய்திகளை இளைஞர்க்கு அறியத்தருவதோடு, இந்து இளைஞர் கழகத்தாரின் முயற்சி வெற்றி பெறல் வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

*யாழ். இந்துக் கல்லூரி,*
*10-10-69.*

ந. சபாரத்தினம்

# காந்தி மலர்

யாழ். இந்துக் கல்லூரி
இந்து இளைஞர் கழக வெளியீடு

10-10-1969


## தொலைந்த விளக்கினைத் தேடுவோம்

அந்நிய ஆதிக்கம் என்ற இரும்புப்பிடியிலே சிக்கித் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேயத்தின் மீது, அடிமைத்தனம் என்ற பேரிருள் கவிந்து கிடந்தது. அந்த இருளைப் போக்கவல்ல சத்தியதீபமும் நெடுநாள் உபயோகப்படுத்தாத காரணத்தினாலே, துருப்பிடித்த நிலையிலே மூலையில் எறியப்பட்டிருந்தது.

அவ்வேளையிலே உடலால் மெலிந்து, ஆனால் ஆன்மபலத்திலே ஒப்பற்று விளங்கிய மகான் ஒருவர் தோன்றிப் புனிதமான தமது பெருமுயற்சியால், அந்தத் தீபத்தினைத் தேடி எடுத்துத் துருக்களைந்து, அஹிம்சை என்ற நெய்யினை ஊற்றி, அன்புத் திரியிட்டுச் சத்தியாக்கிரகம் என்ற தீக்கொண்டு அதனை ஏற்றி அடிமையிருளை ஓட்டெடுக்க வைத்திட்டார்; சத்தியத்தின் பேரொளியினைப் பாரத நாடு மட்டுமன்றி, உலகமே கண்டு பரவசமடைந்து பவித்திரம் பெறும் வண்ணம் பணிபுரிந்தார்; தாம் சென்ற இடமெல்லாம் அதனை எடுத்துச் சென்று மனுக் குலத்தின் அகஇருளினையும் போக்கினார். ''எதிர்கால சந்ததியினர், இத்தகைய ஒருவர் நம்மிடையே தசையோடும் குருதியோடும் உலாவினர் என்பதை நம்ப மாட்டார்கள்'' என்று அறிவுலகமே, அவரை வியந்து போற்றியது.

அப் பெருந்தகையாளரின் ஜீவயாத்திரை முடிவடைந்து, இருபதாண்டுகள் ஆகி விட்டன. அவர் தோன்றி நூறாண்டுகளானதை உலகம் யாவும் பத்தி சிரத்தையுடன் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தக் கொண்டாட்டத்திலே தனது காணிக்கையையும் செலுத்தல் வேண்டும் என்ற பேரவாவின் பயனாக, யாழ். இந்துக் கல்லூரி வெளியிட்டுள்ள இச் சின்னஞ்சிறு காந்தி மலரை, அமரராகிவிட்ட மகாத்மாவின் பாதமலர்களிலே மானசீகமாகச் சூட்டுவதிலே நாம் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றோம்.

இதே வேளையில் நாம் வேறொன்றையும் மறந்து விடவில்லை. 1948 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாளன்று, மதவெறியன் ஒருவனின் துப்பாக்கிக் குண்டிற்கு மகாத்மா பலியான அன்றைக்கே, மீண்டும் சத்தியதீபம் தூர வீசப்பட்டு இருளேறித் துருவேறிக் கிடக்கின்றது.

காந்தி நூற்றாண்டு விழாவானது, அந்தத் தீபத்தினைத் தேடி அடைந்து அதன் துரு நீக்கி மீண்டும் ஏற்றிவைக்கும் வலிவையும், பெருவிருப்பையும் யாவர்க்கும் அளிப்பதாய் அமைதல் வேண்டும். இம்முயற்சியிலே தலைப்படுவோர்க்கு நாமும் எம்மாலான உறுதுணையையும், உற்சாகத்தையும் அளிப்போம் என்பதன் வெளிப்பாடாகவே இம்மலர் இன்று வெளியாகின்றது. மாணவரும், மற்றையோரும் இதனை வரவேற்று, வாசித்துச் செயலுந்தலை அடைவார்களென எதிர் பார்க்கின்றோம்.

காந்தி மலரை மலர்வித்தோர்க்கும், மணமூட்டியோர்க்கும் எமது இதயங் கனிந்த நன்றி உரியதாகுக.

— ஆசிரியர்

# காந்தி அஞ்சலி

## கவிதைகள்

### மகாத்மாநீ வாழ்க வாழ்க

வாழ்கநீ எம்மா னிந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மாநீ வாழ்க வாழ்க.

— மகாகவி பாரதி.

### சிந்தனை செய்

சத்தியத்தால் மன்அரிச் சந்திரனைத் தண்ணருளால்
புத்தபெரு மானையொத்த புண்ணியனை – உத்தமனும்
அந்தணனைக் காந்தி அடிகளை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

— கவிமணி தேசிகவி நாயகம்பிள்ளை.

### பணிந்திடுவோம்

காந்தி மகானைப் பணிந்திடுவோம்
காட்டிய அஹிம்சை அணிந்திடுவோம்
சாந்தியின் இன்பம் நிறைந்திடுவோம்
சண்டைகள் மிகவும் குறைந்திருப்போம்
மாந்தர் பிறப்பின் சிறப்படைவோம்
மதவெறி இனவெறி அறப்பெறுவோம்
தாழ்ந்தவர் யாரையும் தாங்கிடுவோம்
தன்னலக் கொடுமைகள் நீங்கிடுவேம்.

— நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை.

### கருணைசெய் கிறிஸ்து போன்றாய்

மன்னுயி ரெல்லாம் வாழ மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தாய் புத்த தருமமே உருவெ டுத்தாய்
கன்னத்தில் அடித்த வர்க்கும் கருணைசெய் கிறிஸ்து போன்றாய்
மண்ணுல கெல்லாம் போற்ற மகாத்மாநீ வாழ்க! வாழ்க!

— யோகி சுத்தான ந்த பாரதியார்.

### அவர் பெயர் வாழ்க நன்றே

வீடுற்றார் காந்தி யாரென் றுரைத்தனர் வெடித்த துள்ளம்
நாடுற்ற பழிக்குத் தம்மை நலிவுக்குள் ளாக்கும் செய்தி
ஏடுற்ற கதையாய்க் கேட்டோம் இன்னார்பால் எளிதிற் கண்டோம்
ஆடுவார் நெஞ்சந் தோறும் அவர்பெயர் வாழ்க நன்றே.

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

# காந்தி அஞ்சலி

[1948-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் மகாத்மா காந்தி, கொலைவெறியன் கோட்சேயின் துப்பாக்கிக்குத் தம் தூய உடலை இரையாக்கி அமரரானார். அவரை இழந்ததால் உலகெங்குமே துன்ப இருள் சூழ்ந்தது. ஆன்றோர்தம் விழிகளெல்லாம் குளங்களாயின. அவ் வேளையில் அவர்கள் கூறிய துன்ப உரைகளாகிய கண்ணீர் மலர்களி லிருந்து குறிப்பிடத்தகுந்த பத்தினை இங்குக் கோத்துத் தருகின்றோம்.]

## விளக்கு அணைந்தது

"நம்மிடையேயிருந்த விளக்கு அணைந்தது. எங்கு நோக்கினும் இருள் சூழ்ந்துள்ளது................. நம் அரும்பெருந்தலைவர் — பாபு என்று நாம் அழைத்து வந்தோமே — அவர், நம் நாட்டின் தந்தை மறைந்துவிட்டார்........... அவ்வாறு சொல்வதும் பொருந்தாதென்று எண்ணுகிறேன். எனினும் நாம் இத்துணை ஆண்டுகளாக எவ்வாறு பார்த்து வந்ததோமோ அவ்வாறு இனி அவரைப் பார்க்க முடியாது! அறிவுரை கேட்க அணுக முடியாது! அவரிடமிருந்து ஆறு தல் பெறமுடியாது! அது எனக்கு மட்டுமா? நம் நாட்டிலுள்ள கோடிக்கணக் கான எல்லா மக்களுக்குமே ஒரு பேரிடியாகும்! உங்களுக்கு நேர்ந்த புண்ணை நானோ அல்லது வேறு எவரோ ஆற்றுதல் இயலாது."

— நேரு.

## கடவுள் காப்பாற்றுவாராக!

"நம்முடைய அருஞ் செல்வத்தை இழந்துவிட்டோம். ஓர் அறிவற்ற வெறி யன் திருடிக்கொண்டு போய்விட்டான். இந்தியாவுக்குப் பெரிய இழப்பு நேர்ந்த இக்காலத்தில் அதைக் கடவுள் காப்பாராக. நம் அருந்தலைவர் பலியான பிற காவது எல்லா நிந்தனைகளும், ஐயங்களும் முடிவடையட்டும்."

— ராஜாஜி.

## அவருடனேயே இறந்துவிட்டோம்

"காந்தியடிகளின் உயிரும் எங்கள் உயிரும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதவை என்னுமாறு எங்களிற் சிலர் நெருங்கிப் பழகினோம்; எங்களிற் சிலர் உண்மையில் அவருடனேயே இறந்து விட்டோம்! உயிரின் ஒரு பாதி போய் விட்டது போன்ற நிலைமைக்குப் பலர் வந்துவிட்டோம். ஏனெனில் நம்முடைய உயிர், தசை, குருதியெல்லாம் அவர் வாழ்க்கையுடன் பிணைப்புற்றவை."

— கவியரசி சரோஜினிதேவி.

## நம்பமாட்டார்

''இனிவரும் பரம்பரையினர், இத்தகைய ஒருவர் குருதியோடும், தசையோடும் இந்நிலவுலகிலே உலாவி வந்தார் என்பதை நம்பவும் மாட்டார்.''

— *ஐன்ஸ்ரீன்.*

## மனிதர் மாறவில்லை

''நம் காலத்திலே தூய்மை, மேன்மை, உளங்கவர் ஆற்றல் ஆகிய அனைத்திலும் முதல்வராக இருந்துவந்தவர், ஒரு பேதையின் சீற்றத்திற்கு இரையாகி விட்டார். சோக்கிரட்டீஸ் நஞ்சைக் குடிக்க நேர்ந்தது. இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்த அநாகரிக நிலையிலிருந்து நாம் மாறவில்லை என்பதையே இது காட்டுகின்றது.''

— *இராதாகிருஷ்ணன்.*

## ஈடு செய்யமுடியாத பேரிழப்பு

''காந்தியடிகளின் பிரிவுகேட்டு நானும், அரசியும் வருந்தினோம்; பேரதிர்ச்சியடைந்தோம். இந்திய மக்களுக்கு — உண்மையில் மனித சமுதாயத்திற்கே — ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்காக எங்கள் உள்ளத்தில் வழியும் பரிவு இந்திய மக்களுக்கு உரியது.''

— *ஆறும் ஜோர்ஜ் அரசரும் அரசியும்.*

## அளவுக்கு மீறிய நல்லவர்

''அளவுக்கு மீறிய நல்லவராக இருப்பது எவ்வளவு தீங்கானது என்பதை இது காட்டுகிறது.''

— *பேர்னட் ஷோ.*

## திடுக்கிடவைத்தது

''இந்தப் பெரும் பாதகச் செயல் என்னைத் திடுக்கிட வைத்தது.''

— *சேர்ச்சில்.*

## அதிர்ச்சி

''இக் கொடிய நிகழ்ச்சியால் இந்தியாவுக்கு மட்டுமன்றி உலக முழுமைக்குமே என்ன தீங்கு விளையுமென்று நினைக்கவும் இயலாத அத்துணை அதிர்ச்சி இது.''

— *டி. எஸ். சேனநாயகா.*

## துப்பாக்கியை ஏன் செய்தனர்?

''தம் மக்களுக்குச் சேவை செய்வதில் தமது வாழ்க்கையையே ஈடுபடுத்திய சமாதான வாதியான காந்தி கொலையுண்டார்! எங்கள் பத்துவயது மகன் கண்ணீர் சொரிந்துகொண்டு, ''துப்பாக்கி செய்ய யாருக்குமே தெரியாமல் போயிருக்கலாகாதா?'' என்றான்.''

— *பேள் எஸ். பக்.*

# காந்தியடிகளின் வாழ்க்கைப்படிகள்

1869, அக்டோபர், 2. காந்தியடிகள் பிறப்பு.

1881, ராஜகோட் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

1883, அன்னை கஸ்தூரிபாவை மணந்தார்.

1888, செப்டம்பர். இங்கிலாந்துக்குப் பயணம்.

1891, ஜூன். இந்தியா திரும்பி வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

1893, ஏப்ரல். தென்னாபிரிக்கா பயணம்.

1896, இந்தியா திரும்பினார்.

1896, நவம்பர். தமது குழந்தைகளுடனும் மனைவியுடனும் தென்னாபிரிக்காவுக்குத் திரும்பவும் சென்றார்.

1906, டிரான்சுவாலிலிருந்த ஆசிய மக்களுக்கு எதிரான சட்டத் திருத்தத்தை எதிர்த்து அறப்போர் தொடங்க உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

1907, வழக்கறிஞர் தொழிலை உதறித்தள்ளிவிட்டு அறப்போரில் இறங்கினார்.

1908, ஜன. 10. டிரான்சுவாலிலிருந்து வெளியேற மறுத்ததால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

1908, ஜன. 30. ஓர் உடன்பாடு ஏற்பட்டதால் விடுதலை பெற்றார்.

1908, பெப். 8. ஒரு பட்டாணியன் அவரைக் கொல்ல முயற்சி செய்தான்.

1908, ஓக. மீண்டும் அறப்போர்.

1908, ஒக். மீண்டும் சிறைவாசம்.

1909, ஜூன். ஆங்கிலேய அரசிடம் தூது போக இங்கிலாந்து பயணம்.

1911 — 12, ஒரு வாரம் உண்ணாவிரதம். 4 மாதங்களுக்குத் தினசரி ஒரு வேளைச் சாப்பாடு; பின்னர் 14 நாட்கள் உண்ணாவிரதம்.

1912, ஐரோப்பிய ஆடைகளைத் துறந்தார். பழவர்க்கங்களை மட்டும் உண்ணத் தொடங்கினார்.

1913, மூன்று பவுன் தலைவரி விதித்ததை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் தொடங்கினார். கைது செய்யப்பட்டு விடுதலையடைந்தார்.

1913, நவ. 9. மீண்டும் கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறைத்தண்டனையடைந்தார்.

1913, டிச. 18. நிபந்தனையின்றி விடுதலையடைந்தார்.

## காந்தியடிகள் — சுமட்சு உடன்படிக்கை

1914, ஜன. 21. காந்தி — சுமட்சு உடன்படிக்கை; சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

1914, ஜூலை. இங்கிலாந்து பயணம்.

1914, ஆக. உலகப்போர் ஆரம்பம்; காந்தியடிகள் லண்டனில் இந்தியர் இயங்கு மருந்தகப் படையைத் (Ambulance) திரட்டினார்.

1915, ஜன. இந்தியா திரும்பினார்.

1915, மே. சபர்மதி ஆசிரமம் தொடங்கினர்.

1915 — 16, இரயில் வண்டியில் 3-வது வகுப்பில் இந்தியா-பர்மா சுற்றுப்பயணம்.

1918, ஜன. தீர்வையை நீக்க பம்பாயிலுள்ள கெய்ரா மாவட்டத்தில் சத்தியாக்கிரகம் தொடங்கினர்.

1919, பெப். ரௌலட் சட்டத்தை நீக்கச் சத்தியாக்கிரக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

## சத்தியாக்கிரக இயக்கத் தொடக்கம்

1919, ஏப். 6. ஆசிய இந்தியா சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினர்; நாடெங்கும் வேலை நிறுத்தம்.

1919, ஏப். 8. பஞ்சாப்பில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டுப் பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1919, ஏப். 13. அமிருதசரசில் ஜாலியன்வாலாபாக் படுகொலை.

1919, ஏப். 14 மக்கள் வன்முறையில் ஈடுபட்டதால் மூன்றுநாள் உண்ணுவிரதம்.

1919, ஏப். 18. சத்தியாக்கிரக நிறுத்தம்.

1919, செப். 'நவஜீவன்' ஆசிரியரானர்; ஒக்டோபரில் 'யங் இந்தியா' ஆசிரியரானர்.

1920, கிலாபத் ஒட்டி இராசப் பிரதிநிதியிடம் தூது.

1920, ஓக. 1. கேஸரிஹிந்த் மெடல், ஜூலு யுத்த மெடல், போயர் யுத்த மெடல் ஆகியவைகளைத் துறந்தார்.

1920, டிச. அகிம்சா முறையில் நாட்டு விடுதலை பெறுவதென்று நாகபுரி காங்கிரசில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

1921, ஜூலை. 21. அந்நியத் துணி நீக்க இயக்கம்.

1921, டிச. காங்கிரசு காந்தியடிகளுக்குச் சர்வாதிகாரம் அளித்தது.

1922, பெப். 1. பர்த்தோலியில் சத்தியாக்கிரகம் தொடங்கப்போவதாக இராசப் பிரதிநிதிக்கு அறிக்கை.

1922, பெப். 6. சௌரி சௌராவில் மக்கள் கொள்ளை, சூறையில் ஈடுபட்டதால் 5 நாள் உண்ணுவிரதம் தொடங்கினர். சத்தியாக்கிரக நோக்கத்தைக் கைவிட்டார்.

1922, மார்ச். 18. அரசுக்கு எதிராகப் பேசியதாகக் கைதுசெய்யப்பட்டு, 6 ஆண்டுச் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டார்.

1924, ஜன. 21. அப்பெண்டிஸிடிஸ் அறுவைச் சிகிச்சை;
பெப். 5-ல் விடுதலையானர்.

## 21 – நாள் உண்ணுவிரதம்

1924, செப். 18. இந்து — முஸ்லீம் ஒற்றுமைக்கு 21 - நாள் உண்ணுவிரதம் தொடங்கினர்.

1924, டிச. பெல்காம் காங்கிரசுக்குத் தலைமை வகித்தார்.

1925, செப். அகில இந்திய சர்க்கா சங்கத்தைத் தொடங்கினர்.

**1925,** நவ. ஆசிரமவாசிகள் தவருக நடந்துகொண்டதால் உண்ணுவிரதம் இருந்தார்.

**1925,** நவ. சத்தியசோதனை - காந்தியடிகள் தமது ''தன்வரலாறு'' எழுதத் தொடங்கினுர்.

**1928,** டிச. 1929-க்குள் இந்தியாவுக்கு டொமினியன்நிலை அளிக்கப்படாவிடில் சுதந்திரப் போராட்டம் தொடங்கப்போவதாகக் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

**1929,** டிச. இந்தியாவின் முழு விடுதலைக்குப் போராடுவதாக லாகூர் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

**1930,** பிப். சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்க முடிவு.

## உப்பு சத்தியாக்கிரகம்

**1930,** மார்ச். 2. உப்புச் சத்தியாக்கிரகம்.

**1930,** மார்ச். 12. தண்டி யாத்திரை.

**1930,** மே. 5. கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறை.

**1931,** மார்ச். காந்தி - இர்வின் உடன்படிக்கை.

**1931,** ஆக. 29. காங்கிரசுத் தூதராக இரண்டாவது வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்து பயணம்.

**1931,** டிச. 28. இந்தியா திரும்பினுர்.

**1932,** ஜன. 4. கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறையில் தள்ளப்பட்டார்.

**1932,** செப். 20. அரிசனங்களின் தனித்தொகுதியை ஒழிக்கச் சிறையில் சாகும் வரை உண்ணுவிரதம்.

**1932,** செப். 26. தம் வேண்டுகோள் ஏற்கப்பட்டதால் உண்ணுவிரதம் நிறுத்தம்.

**1933,** பிப். 11. 'ஹரிஜன்' பத்திரிகை தொடங்கினுர்.

**1933,** மே. 8. ஆன்ம பரிசுத்தத்திற்காக 21 நாட்கள் உண்ணுவிரதம் ஆரம்பம்.

**1933,** மே. 9. சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது.

**1933,** மே. 23. உண்ணுவிரதம் முடிந்தது.

**1934,** ஜன. 26. சத்தியாக்கிரக ஆசிரமம் கலைக்கப்பட்டது.

**1934,** செப். 17. அக்டோபர் முதல் தேதியிலிருந்து அரசியலிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்தார்.

**1934,** டிச. 14. அகில இந்தியக் கைத்தொழில் மன்றம் தொடங்கினுர்.

**1936,** ஏப். 30. வார்தா அருகிலுள்ள சேவாகிராமம் தலைமைச் செயலகமாயிற்று.

**1937,** அக். 22. வார்தா கல்வித் திட்டம்.

**1939,** மார்ச். 3. ராஜகோட்டை சீர்திருத்தம் சம்பந்தமாக உண்ணுவிரதம் தொடங்கினுர்; இராசப் பிரதிநிதி தலையீட்டால் மார்ச் 7-ஆந் தேதி உண்ணுவிரதம் நின்றது.

1940, செப். யுத்த நிலைமை பற்றி இராசப் பிரதிநிதியைச் சந்தித்தார்.

1940, அக். தனிப்பட்டவர் சத்தியாக்கிரகத்திற்கு அனுமதி.

1941, டிச. 30. காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.

1942, ஜன. 18. 1940 அக்டோபரில் நிறுத்தப்பட்ட 'ஹரிஜன்' பத்திரிகையை மீண்டும் தொடங்கினார்.

1942, மார்ச். 27. புது டெல்லியில் ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் சந்திப்பு.

## "குவிட்" இந்தியா

1942, மே. இந்தியாவை விட்டு வெளியேறுமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டார்.

1942, ஆக. 8. குவிட் இந்தியா தீர்மானம் பற்றி, பம்பாயில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் பேசினார்.

1942, ஆக. 9. கைது செய்யப்பட்டு, பூனாவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறைவைக்கப்பட்டார்.

1943, பிப். 10. 21 நாள் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

1944, பிப். 22. கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் சிறையில் உயிர் நீத்தார்.

1944, மே. 6. நிபந்தனையின்றி விடுதலை.

1944, செப். 9 - 27. பாக்கிஸ்தான் சம்பந்தமாக ஜின்னாவுடன் பேச்சு.

## சென்னை வருகை

1946, ஜன. 21. சென்னைக்கு வருதல்.

1946, பிப். சென்னையில் பார்லிமெண்டரி தூதுக்குழு சந்திப்பு.

1946, ஏப். ஹெர்பர்ட் ஹூவருடன் சந்திப்பு.

1946, ஜூன். 30. பூனா அருகில் காந்திஜி சென்ற தனிரயிலைக் கவிழ்க்க முயற்சி.

1946, அக். நவகாளி கலவரப் பகுதிகளில் சுற்றுப்பயணம்.

1947, ஏப். 16. அமைதி ஏற்படக் காந்தியடிகள் - ஜின்னா கூட்டு அறிக்கை.

1947, ஆக. 15. இந்தியா விடுதலையடைந்தது.

1947, செப். 1. இந்து — முஸ்லிம் ஒற்றுமைக்குக் கல்கத்தாவில் உண்ணாவிரதம்.

1947, செப். 73 மணி நேரம் கழித்து உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது.

1948, ஜன. 13. டில்லி கலவரத்தைக் கண்டித்து மீண்டும் காலவரையறையின்றி உண்ணாவிரதம் தொடங்கினார்.

1948, ஜன. 18. தலைவர்கள் வாக்குறுதியின் மீது உண்ணாவிரதம் நிறுத்தம்.

1948, ஜன. 20. வழிபாட்டில் குண்டு வீசப்பட்டது.

1948, ஜன. 30. வழிபாட்டுக் கூட்டத்துக்குப் போகும்பொழுது காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(நன்றி : கலைக்கதிர்)

# மகாத்மாவைப் போற்றிய மாண்பாளர்

**வங்கம் ஈன்றெடுத்த மகாகவி தாகூர் உரைத்தவை:**

''மகாத்மா காந்தி விடுதலைப் பாதையைத் திறந்துவிட்டபோது அவர் கையில் எந்தவகையான அதிகாரக் கருவியும் இல்லை. எந்தவிதமான அடக்கு முறைச் சக்தியும் கிடையாது. ஆனால், அவருடைய நல்லாண்மையிலிருந்து உதய மான சக்தியோ, இசையைப்போல், அழகைப்போல் வருணிக்க முடியாதது......... அவருடைய குணச்சிறப்பில் சத்தியமானது மிக எளியதன்மையில் ஒளி நல்கு வதையே மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

இதனாலேயே அவர் அரசியல் துறையிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்த போதிலும் அவரை மகான்களில் ஒருவராக எல்லா மக்களும் கொண்டாடுகின் றனர்.''

**பிரான்ஸ் அளித்த பெருஞானி ரோமெய்ன் ரோலந்து கூறியவை:**

''உலக வரலாற்றில் அவருடைய பெயர் புனித நினைவுடன் போற்றப்படும். இந்தியப் பெருமக்களின் ஒற்றுமை உணர்ச்சியையும், அவர்களுடைய சக்தியை யும், விடுதலை வேட்கையையும் பிரதிபலித்துக் காட்டும் 'கிரியாசக்தி'யாக அவர் விளங்குகின்றார். உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அவருடைய உருவத்தின் ஒளி வீசுகிறது. அவர் தோன்றியதை ஏதோ ஓர் அற்புதச் செயல் நிகழ்ந்திருப் பதாகவே மேனாட்டார் கருதினார்கள்.''

# தோன்று நிகழ்ந்தது........

[மகாத்மா காந்தி அமரரானதைத் தொடர்ந்து 1948 மார்ச் திங்களில், 'இந்து இளைஞன்' காந்தி மலராக வெளியாயிற்று. அதிலி ருந்து ஒரு கவிதையையும், ஆங்கிலக் கட்டுரை ஒன்றையும் மாதிரிக்குத் தருகின்றோம்.]

## இவர் யாரோ?

அஞ்சிக் கிடந்தநம் நெஞ்சந் துணிந்திட
ஆண்மை எழுப்பினதார் — ஒரு
வஞ்சமி லாதவர் வாய்மையின் தூய்மையின்
வாழ்க்கையர் காந்தியவர்.

ஆயுத மின்றியும் யாரும் வணங்கிடும்
அன்பைப் பெருக்கினதார் — சற்றும்
சாயுதல் செய்திடாச் சத்திய மூர்த்திநம்
தவமுனி காந்தியவர்.

அடிபட்டு மாளவும் சிறைப்பட்டு வாழவும்
அச்ச மகற்றினதார் — உண்மை
குடிகொண்டு கோபத்தைக் குறைவற நீக்கிய
குணமுயர் காந்தியவர்.

A. இராமநாதன் S. S. C.

## Gandhiji at Jaffna Hindu College

Gandhiji made a tour to Ceylon in November 1927 to collect money for the starving millions in India. He had his Khadi collection all over Ceylon. When he visited Jaffna he paid a visit to our college on the 29 th of November 1927. He needed no invitation for he was ready to go to any place where he could get some money. On that morning the downstair hall was brightly decorated with flowers. Gandhiji was dressed in simple khaddar. Our college presented him a handsome purse of Rs. 707/-. Mr. A. Cumaraswamy, our Principal, presided over the meeting. Gandhiji in his short address said that it had given him very great pleasure to have met them that morning. As he saw the students in their finery he made an appeal that they should shed those beauties and clothe themselves in simple khaddar. He wished the students to build their edcuation on character, for education without character was a mere flourish. He thanked the staff and students for the generous purse they had presented. Before leaving he blessed the students: "May God help you to become pure."

**T. Poopalarajah** S. S. C.

*　　　*　　　*

### வியன்மிகு குயவர்

*''களிமண்ணிலிருந்து கர்ம வீரர்களை ஆக்கவல்ல சக்தி அவருக்கு உண்டு.''*

***— மகாத்மாவின் அரசியற்குரு கோபாலகிருஷ்ணகோகலே***

### ஒருவரில் மூவர்

*''செயற்றிறனில் ஒரு டயஜீனஸ், மனிதாபிமானத்தில் ஞானி பிரான்சிஸ், உள்ளெழுந்தோங்கு ஞானத்தில் சோக்கிரட்டீஸ்........''*

***— பிரான்சிஸ் நியல்சன்***

### கிறிஸ்து போன்றர்

*''வரலாறு கண்ட பெரியார்களுள், கிறிஸ்துவின் மிக அதிகமான குணுதிசயங்களைப் பெற்றிருந்தும், தம்மைக் கிறிஸ்தவர் என்று அழையாதவர்.''*

***— டொக்டர் ஸ்ரான்லி ஜோன்ஸ்***

*''கிறிஸ்துவைத் தழுவிக் கிறிஸ்து சமயத்தைத் தழுவாதவர்.''*

***— லூயி பிஷர்***

*Extracts from*

# Gandhiji's Speech at a Meeting of the Hindus of Jaffna on 27-11-27

## AT THE JAFFNA HINDU COLLEGE

This is the last of a series of many meetings, whose number even I cannot now remember, that I have been addressing to-day. Precious as all of them have been, this is to me the most precious because you have convened a meeting of Hindus specially to be addressed by me. This I take to mean that I must speak to you Hindus as a Hindu. And it gives me the greatest pleasure to have been invited to do so.

As you know, though my claim has not been accepted by those who call themselves orthodox Hindus, I persist in calling myself an orthodox Hindu. But by making that claim I, a votary of truth, must not mislead in any way whatsoever. If orthodox Hinduism consists in dining or not dining with this man or that man, and touching this man and not touching that man, or in quarrelling with the Mussalmans and Christians, then I am certainly not an orthodox Hindu. But if orthodox Hinduism can mean an incessant search after what Hinduism possibly can be, if orthodox Hinduism can mean an incessant striving to living Hinduism to the best of one's lights, then I do claim to be an orthodox Hindu......

Having thus registered my claim in the presence of this audience, I now wish to tell you as an orthodox Hindu what in my humble opinion your duty is in Jaffna, and in Ceylon......... As I have said in so many speeches in South India and as I have written fairly exhaustively on *varna dharma* in 'Young India,' I hold that there is nothing in common between caste and varna. Whilst varna gives life, caste kills it, and untouchability is the hatefullest expression of caste. You will therefore banish untouchability from your midst. I make bold to say that there is no warrant whatsoever in Hinduism for untouchability as it is practised today. If therefore you want to live your Hinduism in its purity in the midst of Buddhist countrymen, you will take care that you will not consider a single human being as an untouchable.........

I have a letter from a Jaffna Hindu telling me that there are some temples in this place where you have dances by women of ill fame on certain occasions. If that information is correct, then let me tell you that you are converting temples of God into dens of prostitution.

A temple to be a house of worship, to be a temple of God, has got to conform to certain well defined limitations. A prostitute has as much right to go to a house of worship as a saint. But she exercises that right when she enters the temple to purify herself. But when the trustees of a temple admit a prostitute under cover of religion or under cover of embellishing the worship of God, then

they convert a house of God into one of prostitution. And if anybody no matter how high he may become to you and seek to justify the admission of women of ill fame into your temples for dancing or any such purposes, reject him and agree to the proposal that I have made to you. If you want to be good Hindus, if you want to worship God, and if you are wise you will fling the doors of all your temples open to the so-called untouchables. God makes no distinction between his worshippers. He accepts the worship of these untouchables just as well and as much as that of the so-called touchables, provided it comes from the bottom of the heart.

*( Courtesy — The Young Hindu, March 1948 )*

---

## சத்திய சந்தர்

இந்த இருபதாம் நூற்றுண்டிலே சத்தியமே ஜயம் என்ற வார்த்தையைப் பின்பற்றி, அதன் வழியில் வெற்றியடைந்த ஒரு மனிதர் இருந்திருப்பார், என்ருல் அம்மனிதர் மகாத்மா காந்தியேயாவர்.

இக்காலம் நாம் ஒருவரிடம் போய்ச் "சத்தியத்தைப் பின்பற்றி, மகாத்மா வாழ்ந்து வெற்றியடைந்தாரே அதன்படி நாமும் ஏன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது?" என்று கேட்போமாஞல், அவர் "எல்லோரும் மகாத்மா ஆகிவிடுவோமா?" என்று கூறி மழுப்பி விடுவார். ஆனுல் காந்தி, அப்படி நினைக்கவில்லை.

சிறுவயதில் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார். அக்கதை அவர் உள்ளத்தை உருக்கிவிட்டது. "அரிச்சந்திரனைப்போல் ஏன் எல்லோரும் சத்திய சந்தராய் இருக்க முடியாது?" என அவர் சிந்தித்தார். அன்றுமுதல் சத்தியத்தைப் பின்பற்றினர். அதைப்பற்றி அவரே கூறுகிருர்.

"ஒருமுறை அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்க்க என் தந்தையின் அனுமதி பெற்றுப் போயிருந்தேன். அந்நாடகம் என் இருதயத்தைக் கவர்ந்துவிட்டது. அதை எத்தனைமுறை பார்த்தாலும் எனக்குச் சலிப்புத் தோன்றவில்லை. "அரிச்சந்திரனைப்போல் ஏன் எல்லோரும் சத்தியசந்தராய் இருக்க முடியாது?" என்று இரவும் பகலும் நானே கேட்டுக்கொள்வேன். 'சத்தியத்தைக் கடைப்பிடித்து நின்று அரிச்சந்திரன் பட்ட துன்பம் எல்லாம் அநுபவிக்கவேண்டும்' என்ற இலட்சியம் என் உள்ளத்தில் குடிகொண்டது. அரிச்சந்திரன் கதையை உண்மை என நம்பினேன். அதைப்பற்றிச் சிந்திக்கும்போது நான் உருகிவிடுவேன். சத்தியமே சன்மார்க்கத்தின் சாரம் என்று உறுதி கொண்டேன். சத்தியமே எனது வாழ்க்கையின் குறிக்கோளாயிற்று. நாளுக்கு நாள் அது வளரத் தொடங்கியது. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகி வந்தது."

இவ்வாறு கூறும் மகாத்மாவின் இலட்சியம் உண்மையிலேயே நிறைவேறி விட்டது. அந்த இலட்சியத்தை அடைய அவர் அடைந்த துன்பங்கள் அளவில்லாதன. அவரின் சத்திய வாழ்விற்கு ஏற்பட்ட சோதனைகள் கொஞ்சமல்ல. ''சத்தியம் ஒரு அம்சத்தில் பூவிதழிலும் மென்மையாக இருப்பினும், மற்றோர் அம்சத்தில் கற்பாறையிலும் கடினமாக இருக்கும்.''

காந்தி இங்கிலாந்திற்குச் செல்லுமுன் தம் அன்னைக்கு மூன்று சத்தியங்கள் செய்துகொடுத்தார். அவற்றை அவர் இறக்கும்வரை பின்பற்றி வந்தார். அவற்றுள் ஒன்று புலால் உண்ண மாட்டேன் என்பது. புலால் என்பது சாதாரணமாக இறைச்சியையே குறிக்கும். எனவே அவரது நண்பர்கள் ''இறைச்சி சாப்பிடவேண்டாம். முட்டை சாப்பிடும்'' என்றார்கள். அதற்கு அவர் அளித்த பதில், ''புலால் என்பதன் பொருளில் முட்டை சேராவிட்டாலும், என் தாயார் முட்டையைப் புலால் என்றுதான் கருதினார். என் அன்னையார் என்னிடம் வாக்குறுதி பெறும்போது புலால் என்பதிலேயே மற்ற மீன், முட்டை எல்லாம் அடங்கிவிட்டன என எண்ணினார். புலால் என்பதற்கு அவர் என்ன வியாக்கியானம் கூறினாரோ, நான் அதையே பின்பற்றல் வேண்டும்'' என்பதாகும்.

சத்தியத்தை எவ்வளவு நுணுக்கமாகப் பின்பற்றுகின்றார் பாருங்கள். ''பல்லாயிரம் மைல்கட்கப்பால் இருக்கும் எழுத்துவாசனை அற்ற ஒரு தாயிடம் செய்த சத்தியத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறீரே! நீர் இங்கு உண்பது உமது தாய்க்கு எப்படித் தெரியும்? இது மூடநம்பிக்கை'' என்று பலர் சொல்லியும் அசையவில்லை அவர்.

அந்நிய நாட்டிலே அதுவும் சைவபோசனம் இலேசில் கிடைக்காத இடத்திலே அரை வயிறும், கால் வயிறும் உண்டு பட்டினி கிடந்து சத்தியத்தைக் காப்பாற்ற எவ்வளவு உறுதி வேண்டும்?

ஒருமுறை காந்திக்குக் கடுமையான வருத்தம் ஏற்பட்டு உயிரே போகும்படியான ஆபத்து வந்துவிட்டது. அப்போதும் டாக்டரின் சிபாரிசுப்படி மாமிச சூப் உண்ண அவர் சம்மதிக்கவில்லை. எவ்வளவு மன உறுதி?

''அரிச்சந்திரனே இல்லை. அவன் கதையும் பொய். அப்படி யாராவது செய்வார்களா?'' என்று கூறுபவர்களும் மகாத்மா காந்தி நடத்திய சத்திய வாழ்வைக் கேள்வியுற்றால், அரிச்சந்திரன் இருந்திருக்கலாம் என எண்ணுவார்கள். எத்தனையோ பெரிய, சத்தியத்திற்குப் பங்கம் வரக்கூடிய இடர்ப்பாடுகளிலும், சத்தியம் காத்தார் காந்தி. அப்படியானால் அரிச்சந்திரன் ஏன் இருந்திருக்க முடியாது?

எனவே, நாமும் மகாத்மா காந்தியின் விருப்பப்படி சத்திய சந்தராய் இருந்து, வெற்றியடைவோம். ஒவ்வொருவரும் காந்தி நூற்றாண்டு கொண்டாடு முகமாக நாம் இதுவரை செய்துவந்த அவருக்குப் பிரியமற்ற செய்கைகளைக் கைவிடுவோமாக.

சத்தியமே ஜயம்.

பொ. ரகுபதி
9 C.



5

[திரு. யூ. எஸ். மோகன்ராவ் தொகுத்து, இந்தியச் செய்தி ஒலிபரப்பமைச்சினுல் வெளியிடப்பட்டுள்ள 'The Message of Mahatma Gandhi' என்ற நூலில் '**God alone is**' என்ற அத்தியாயத்தின் சாரத்தைச் செய்யுளாக்கியது.]

# ஆண்டவன் ஒருவனே

சொல்லால் விளக்கற் கரிதான செம்பொருளை
எல்லா வகையும் உணர்கின்றேன் — வல்லதனைக்
கண்டதிலை யானுலுங் காரணங்கள் காட்டியிறை
உண்டெனலாம் உண்மை உரை.

*　　*　　*

உண்மை கடவுள், ஒழுக்கம் கடவுளெனத்
திண்மை கடவுளெனத் தேர்ந்துள்ளேன் — எண்ணுங்கால்
நாத்திகரின் நாத்திகமும் நல்ல கடவுளே
ஏத்துவார்க் கெங்கும் உளன்.

*　　*　　*

எல்லா மனிதர்க்கு மெல்லாமாய் எல்லவற்றின்
அல்லாதாய் அத்தனைக்கும் அப்பாலாய்ப் — பொல்லா
அறியாமை சீறி அனைத்தையுமே மன்னித்து
நிறைவினிலே நிற்குமது நீடு.

*　　*　　*

ஆண்டுபல செல்ல அவனருளென் னுள்ளத்தே
நீண்டொலிக்கும் நீர்மை நிதங்காண்பேன் — ஆண்டவனின்
வாழும் அருளென்னை வாழ்விக்கும் துன்பத்தில்
ஆழுங்கால் ஆன்ற புணை.

*　　*　　*

ஆழியாம் மானிடத்தில் ஆங்கோர் துளியாவோம்
ஊழியினில் நூருண்டும் ஓரணுவே — சூழுமிறை
தன்னிற் கலந்திழிவுத் தானுந் தனித்தன்மை
இன்றெனலே ஏற்றம் இனி.

*　　*　　*

வாழ்வோர் குமிழியெனும் வாக்கும் மிகையன்று
தாழ்வாம் பிரிந்து தனித்திடுதல் — வாழ்வதனை
மானிடத்தின் சேவைக்காய் மாய்த்திடுதல் நன்றுகும்
வானிடத்தில் வாழும் வழி.

*　　*　　*

'நான்' அறிய வேண்டுமெனில் நானிலத்தோர் கூட்டினிலே
'நான்' ஒருவன் என்றெண்ணி நம்பனையும் — மானிடரின்
உள்ளிலே கண்டவர்க் கொப்பரிய சேவைசெயல்
தெள்ளறிவின் சீர்த்த திறன்.

* * *

ஆண்டவன்போற் றுன்பம் அளிக்குந் தலைவனையான்
யாண்டுமே கண்டதிலை ஆனாலும் — மாண்டு
மடியுமோர் துன்பிலங்கு மாண்பாகத் தோன்றி
அடியவனாய் ஆக்கும் அவன்.

* * *

முன்னேறிச் செல்கையிலே முன்வந் திடைமறிக்கும்
பன்னூறு சிக்கலிடைப் பாவியாம் — இன்னுத
சாத்தான் குரல்கொடுப்பன் சாராதே நம்பியிறை
பூத்தாள் பிடித்தலே பொற்பு.

* * *

அன்பு கடவுளென் றுன்றோர் உரைத்தாலும்
என்னுயிராஞ் சத்தியமே என்கடவுள் — நண்புறவே
ஈராண்டின் முன்னர்யான் எத்துணையோ சோதனையால்
சீராண்டுக் கண்டேன் சிறந்து.

* * *

உண்மை வெளியிலிலை உள்ளத் தெழுங்குரலே
எண்ணி இதன்பணியை ஏற்குங்கால் — திண்மை
அமையும், அகிம்சை அதைச்சேர வாய்ப்பாய்
அமையும் வழியென் றறி.

* * *

சத்தே இறையாகும் சித்தாம் அறிவவனைப்
பத்தியுறச் சேர்ந்ததொரு பண்பாகும் — சத்தியமில்
ஞானம் இலையதனால் நாடுகின்ற ஆனந்த
கானமே சத்தியமென் பேன்.

* * *

சத்தியத்தைச் சார்வோனைச் சாரா தகந்தையவன்
இத்தரையில் தான்தூ செனக்கொள்வான் — நித்தமுமே
என்வாழ்வில் ஈதை உணர்கின்றேன் நாட்செல்ல
என்கீழ்மை யானறிந்தே னீங்கு.

* * *

மாடு மனைசுற்றம் மற்றெவையும் சத்தியத்தைத்
தேடுகையில் நீங்குமேல் நீங்குகவே — கேடில்
அடியார்க் கடியனாய் ஆகி உடலை
இடைநீக்கல் முத்திக் கிதம்.

— "சோணா"

# பரிசுக் கட்டுரைகள்

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழகம், கல்லூரி மாணவரிடையே ஒரு கட்டுரைப் போட்டியை 3–10–69-இல் நிகழ்த்தியது. இப்போட்டியிலே கல்லூரியின் சகல மாணவரும் கலந்து கொண்டனர். ஆசிரியர் திரு. வை. ஏரம்பமூர்த்தியவர்கள், கட்டுரைப் போட்டியின் பொறுப்பாளராவர். கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாய் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலே முதலிடம் பெற்றோர் பின்வருவோர்:

செல்வன் ந. சத்தியதாசன் (8 E) கீழ்ப்பிரிவு.
செல்வன் ஐ. எம். நகீப் (9 D) நடுப்பிரிவு.
செல்வன் கே. சுசானந்தன் (A/L I B) மேற்பிரிவு.

இவர்களுக்கு எம் வாழ்த்துக்கள். பரிசுபெற்ற கட்டுரைகளை மிகவும் மகிழ்ச்சியோடு இங்கு வெளியிடுகின்றோம்.

**கீழ்ப்பிரிவு — பரிசுக்கட்டுரை.**

## மகாத்மாவின் இளமைப்பருவம்

சேற்றிலே மலர்ந்த செந்தாமரைபோல இந்தியாவிற்கோர் காந்தி பிறந்தார். அவரைப்போல ஒருவர் பிறந்ததுமில்லை; பிறக்கப்போவதுமில்லை.

காந்தியின் குடும்பம் ஓர் நடுத்தரக் குடும்பம். காந்தியின் தந்தை பெயர் கபா கரம்சந்த் காந்தி; தாயார் பெயர் புத்திலீபாய். கரம்சந்த் காந்தி என்பது குடும்பப் பெயர். இவரது தந்தையார் பம்பாயிலுள்ள போர்ப்பந்தர் சமஸ்தானத்தில் மந்திரியாகக் கடமையாற்றினர். தாயார் மிகவும் தெய்வபக்தி உடையவர். அவர் அநுட்டிக்காத விரதமே கிடையாது.

கபா கரம்சந்த் காந்திக்கும் புத்திலீபாய்க்கும் மகனாகக் காந்தி 1869-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெயர் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி.

காந்தி, அவர் வளர்ந்து பாலப்பருவத்தை எய்தினர். காந்தியின் தாயார் சதுர் மாதத்தில் விரதம் அநுட்டிப்பது வழக்கம். அம்மாதத்தில் சூரியனைக் காணாது சாப்பிடுவதில்லை. காந்தி, தம் தாயார் சாப்பிட வேண்டுமென்ற ஆவலினால் முற்றத்திலிருந்து சூரியனை எதிர்நோக்கியிருப்பார். சூரியனைச் சிறிது கண்டவுடன் ''அம்மா, சூரியன் வந்துவிட்டான்; விரைவில் வாருங்கள்'' என்று சத்தமிடுவார். தாயாரோ அலுவல்கள் முடிந்தவுடன்தான் வருவார். அப்போது சூரியன் மறைந்து விட்டிருக்கும். தாயார் சிரித்துக்கொண்டே ''நான் இன்று சாப்பிடுவது கடவுளுக்கு விருப்பமில்லை'' என்று கூறி உள்ளே சென்று விடுவார். அன்று முழுவதும் அவருக்கு உபவாசமாகவே இருக்கும்.

காந்தி பாலபருவம் முடிந்து பள்ளிக்கூடம் செல்லத்தொடங்கினர். ஒரு நாள் காந்தியின் வகுப்புக்குக் கல்விப் பரிசோதகர் வந்து சில சொற்களைக் கொடுத்துவிட்டு, மூலையில் அமர்ந்தார். ஆசிரியருக்கோ நெஞ்சு நடுக்கம். வகுப்பைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார். அநேகமாக எல்லாருடைய சொற்களும் சரியாயிருந்தன. ஆனால், காந்தி எழுதிய சொற்களில் ஒன்று பிழையாயிருந்தது. ஆசிரியர் காந்தியைச் சுரண்டிப் பக்கத்திலிருந்தவனைப் பார்த்து எழுதுமாறு சைகை செய்தார். காந்தி பார்த்து எழுதவில்லை. இது பற்றி ஆசிரியர் வினவியபோது ''பார்த்தெழுதுவது நேர்மையற்ற செயல்'' என்று காந்தி கூறினர்.

இவ்வாறு நேர்மையும், வாய்மையும் விளங்க வாழ்ந்த காந்தி 13-ஆம் வயதில் கஸ்தூரிபாயை மணந்துகொண்டார். நண்பர் சேர்க்கையால் மாமிசம் உண்டார்; புகைத்தார். தாம் செய்த குற்றங்களை உணர்ந்து அவர் தந்தைக்குத் தம் செயல்கள் பற்றி ஒரு நீண்ட கடிதம் எழுதினர். மரணப் படுக்கையில் கிடந்த தந்தை கடிதத்தைப் படித்தார். மகனை மன்னித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

அந்த மன்னிப்பு அவரை ''உண்மையே பேசுவேனென'' உறுதி பூணச் செய்தது; சத்தியாக்கிரகத்தின் வலிமையை உணர வைத்தது. அவர் பார்த்த அரிச்சந்திர நாடகமும், இராமாயண நாடகமும் அவ்வுறுதியை வலிமையாக்கின.

காந்தி இங்கிலாந்துக்குச் சென்று பரிஸ்டர் பட்டம் பெற ஆசைப்பட்டு, தாயாரதும், மனைவியினதும் நகைகளை விற்று அப்பணத்தைக் கொண்டு இங்கிலாந்து சென்றார். செல்லும்போது தாயாருக்கு மூன்று சத்திய வாக்குகளைக் கொடுத்து விட்டுச் சென்றார். மது, மாமிசம், பெண் என்பனவற்றை மனத்தாலும் தீண்டுவதில்லை என்பதே அச் சத்தியவாக்கு. அதனைப் பல இன்னல்களிடையேயும் உறுதியுடன் காத்தார். அங்கே படித்து பரிஸ்டர் பட்டம் பெற்று மீண்டும் இந்தியா வந்தார். இவ்வாறு காந்தியின் இளமைப்பருவம் உண்மையின் அடிப்பட்டு நடந்தது; பின் அமையப்போகும் பெருவாழ்விற்கு வித்திட்டது.

**ந. சத்தியதாசன்**
8 E.

எவ்வுயிரிடத்திலும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் கொண்டு, 'நான் — எனது' என்பது நீங்கி, இன்பத்தையும், துன்பத்தையும் நிகராகக் கொண்டு, பொறுமையாய், எப்போதும் மகிழ்ச்சியோடு, தன்னடக்கம் பெற்று, திட உறுதி கொண்டு, என்னிடத்தில் மனத்தையும் மதியையும் சமர்ப்பித்து, யார் என் பக்தனுகிருனே அவன் எனக்குப் பிரியமானவன்.

— பகவத் கீதை.

நடுப்பிரிவு — பரிசுக் கட்டுரை.

# அஹிம்சையும் சகிப்புத் தன்மையும்

காலத்துக்குக் காலம் பல சக்திகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. நீராவிச் சக்தி, நிலக்கரிச் சக்தி, மின்சக்தி, அணுச் சக்தி என அவை பலதிறப்படும். இச்சக்திகள் இன்று உலகத்திற்குப் பயன்படுகின்றன. ஆனல், 19 ஆம் நூற்ருண்டின் கடைசிப் பகுதியில் ஒரு சக்தி கண்டுபிடிக்கப்பட்டது. அதுதான் மகாத்மா காந்தி உருவாக்கிய அஹிம்சை எனும் மாபெரும் சக்தி. நீராவிச் சக்தியைக் கண்டுபிடித்த ''யேம்ஸ்வாட்''டை விட, மின்சக்தியைக் கண்டுபிடித்த ''எடிசனை'' விட, அணுச்சக்தியை கண்டுபிடித்த ''ஜன்ஸ்டீனை'' விட அஹிம்சையை உருவாக்கிய அண்ணல் காந்தி அதிக புகழ் பெற்றுவிட்டார். இதிலிருந்து அவர் உருவாக்கிய அஹிம்சையின் சக்தியை ஓரளவு அனுமானிக்க முடியும்.

இன்று நம்மிடையேயுள்ள தலைவர்கள் வாய்ப்பேச்சில் வீரர்களாக இருக்கிருர்களே தவிரச் செயல்வீரராக இல்லை. ஆனல், அஹிம்சைக்குப் புத்துயிரூட்டிய காந்திஜி அதனைச் செயற்படுத்தியும் காட்டினர்.

''ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு உனது மறு கன்னத்தையும் காட்டு'' என்று கூறினர் இயேசுநாதர். இம்மொழியைக் காந்தி தம் சொந்த வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டினர்.

ஒருமுறை காந்தி புகையிரதத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது ஒரு வெள்ளையன் அவரை வண்டியை விட்டு இறங்கிப் போகும்படி கூறினன். காந்தி மறுக்கவே, அவன் அவரைக் காலாலுதைத்தான். அப்பொழுது காந்தி அவனைத் திருப்பித் தாக்கவில்லை. மாருக அவனை மன்னித்துவிட்டார்.

''நீ ஒரு நச்சுப் பாம்பை அடிக்குமுன் உனது மனத்திலுள்ள நச்சுப் பாம்புகளை அடித்துவிடு'' என்று எமது காந்தி கூறியிருக்கிருர்.

இன்றைய இளைஞர்கள் சிலர் அநியாயத்தைப் போராட்டத்தினுல்தான் அழிக்கமுடியும் என்று விதண்டாவாதம் பேசுகின்ருர்கள். இது தவறு. ஒரு பெரியார், ''தீமை நெருப்பைப் போன்றது. நன்மை நீரைப் போன்றது. நெருப்பை நெருப்பால் அவிக்க முடியாது. நீரினுல்தான் அவிக்க முடியும்'' என்று கூறியுள்ளார்.

''ஒரு வித்தைக்காரன் எவ்வாறு ஒரு கயிற்றின்மேல் நடக்கின்ருனே, அதே போன்றுதான் அவன் அஹிம்சை வழியில் நடக்க முயல்வது'' என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். மேலும், அவர் கூறுகின்ருர். ''ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் எப்படி முக்கியமோ அவ்வாறே நேர்வழிக்கு அஹிம்சையும் சத்தியமும் முக்கியம்.''

காந்தியைப் புத்தர், யேசு போன்ற மதத் தலைவர்களின் வரிசையில் வைத்தது அவரது அஹிம்சையும், சகிப்புத் தன்மையுந்தான் என்று திடமாகக் கூற முடியும்.

அஹிம்சையும், சகிப்புத் தன்மையும் மிக்க காந்தியைப் பற்றி அவரது அரசியல் எதிரியாகிய ''ஸ்மட்ஸ்'' என்பார் கூறுகின்றார். ''காந்தி எனக்கு ஒரு சோடிக் காலணிகளை அன்பளிப்பாகத் தந்தார். அந்தப் பெரிய மனிதர் அளித்த இக்காலணிகளை அணிய எனக்குத் தகுதியில்லை என்றே நினைக்கிறேன்.''

எனவே, காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடும் நாம், அவர் காட்டிய வழியில் செல்வதே அவருக்கு நாம் எடுக்கும் விழாக்களில் சிறந்தது என்பதை மனத்தில் கொண்டு, நமது வாழ்க்கைச் சக்கரத்தை உருள வைப்போம்.

',ஓர் புனித இலட்சிய வழியில் செல்பவன் இறப்பதில்லை.''

— காந்தியடிகள்.

ஐ. எம். நகீப்
9-ம் வகுப்பு "D"

---

மேற்பிரிவு — பரிசுக்கட்டுரை.

# மகாத்மாவின் போதனைகளை இன்று உலகம் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டிருக்கிறது?

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறையே உலகத்தில் மகான்கள் தோன்றுகின்றனர். இத்தகைய மகான்களைப் பெற்ற பெருமை பாரத பூமிக்கே உரியது: அறிவு வழியையும், அன்பு வழியையும் போதித்த புத்தமகான், பக்தியை மக்களுடைய நெஞ்சிலே வேரூன்றிப் பதியச் செய்த நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் அரவிந்தர், தாகூர் போன்றவர்களைப் பெற்ற பாரதபூமி அகிம்சையையும், சத்தியத்தையும் இரு கண்களாகக் கொண்ட காந்தியைப் பெற்றதில் வியப்பில்லை.

மோகனதாஸ் காந்தி காந்தியடிகளாகி, மகாத்மாவாகி, அவருடைய போதனைகள் காந்தீயம் எனப் போற்றப்பட்டது சூழ்நிலையா? அல்லது ஆத்மிகமா? அவருடைய ஆன்மீக வளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் சூழ்நிலை ஒரு கருவியாகும். அரசுரிமை, கல்வியுரிமை, பண்பாட்டுரிமை, மதவுரிமை முதலிய உரிமைகள் அந்நியரின் ஆட்சியின் கீழ் இருக்கும்பொழுது காந்தி தோன்றினர். கீழை நாட்டு ஆத்மிகத்திற்கும் மேலைநாட்டு விஞ்ஞானத்திற்கும் நடைபெற்ற போரில் ஆத்மிகம் வென்றது; காந்தீயமும் பிறந்தது.

மகாத்மா வாழ்ந்த வாழ்க்கையே ஒரு போதனைதான். அன்பு, சத்தியம் என்ற இரு ஆதாரங்களில் நின்றுகொண்டு உலகமக்களின் நன்மைக்காக அவர் வாழ்ந்தார். புத்தர், யேசு போன்றோர் தனிப்பட்ட மக்களிடையே அன்பு செலுத்த வழிவகுத்தனர். ஆனால் காந்தியோ ஒரு பெரும்நாடு இன்னொரு நாட்டின் மீது அன்புவைக்க வழிவகுத்தார். நாமக்கல் கவிஞர் கூறியதுபோல ''கத்தியின்றி இரத்தமின்றி'' இந்திய நாடு சுதந்திரமடையச் செய்தார். காந்தியே அகிம்சையை முதன்முதல் சுதந்திர போராட்டக் கருவியாகப் பயன்படுத்தியவர். அவரின் அகிம்சையைப் பின்பற்றினால் இன்று உலகத்திலே வறுமையேது? ஏகாதிபத்திய வெறியேது? அமெரிக்க, ரூசிய, சீன வல்லரசுகள் உலகநாடுகளிடையே போர்க்களத்தை உண்டாக்குகின்றன. இதனால் உலகம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்கின்றது. இது காந்தியின் அன்பையும் அகிம்சையையும் மறந்ததால் வந்தவினையாகும். இன்று அவரின் நூற்றாண்டிலேயே குஜராத்தில் இந்து முஸ்லிம் கலகம் நடக்கின்றது. காந்தீயத்தை வாழ்விலட்சியமாகக் கொண்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?

காந்தி சத்தியநெறி தவறாதவர். எந்த இக்கட்டான நிலையிலும் அவர் சத்தியம் தவறியதில்லை. அரிச்சந்திரன் போல உண்மையையே தெய்வமாக அவர் கொண்டவர். இன்று தனி மக்களிடம் மட்டுமன்றி நாட்டிலேயே சத்தியம் தவறுகிறது. காந்தி பிறந்த பாரத தேசத்திலேயே அவரின் இலட்சியங்களை முன்பின் முரணாகப் பேசி அவமதித்துச் சத்தியநெறி தவறுகிறார்கள், அரசியல்வாதிகள்!

காந்தி பகவத் கீதைமீது விருப்புடையவர். இன, மத, மொழி வேறுபாடுகளில்லாமல் எல்லா மதமும் ஒன்றே என்று கருதியவர் இவர். பகவத் கீதையில் கூறப்பட்ட ''எல்லா நதிகளும் இறுதியில் ஒரு சமுத்திரத்தையே அடைகின்றன. இதே போல் எல்லா மதமும் இறுதியில் ஓர் இறைவனையே அடைகின்றன'' என்ற பொன்மொழியை அவர் வாழ்விலக்காய்க் கொண்டிருந்தார். ஆனால், இன்று எங்களிடையே சாதிக் கலவரமும் சமய வேறுபாடுகளும் ஏற்படுகின்றன. இதெல்லாம் நாம் காந்தியின் கொள்கையை மறந்ததால் வந்த வினையாகும்.

களவு, கொலை, காமம், சூது, குடி என்னும் பஞ்சமா பாதகங்களையும் காந்தி வெறுத்தார். இதனைத் தாம் வாழ்ந்த சமுதாயத்திலிருந்து நீக்கப் பெரு முயற்சி செய்தார். இவற்றுக்கெல்லாம் காரணம் மதுவெனக் கருதி மதுவிலக்கை வற்புறுத்தினர். ஆனால், இன்றும் சில இந்திய அரசுகள் வருமானத்திற்காக மது விலக்கை நீக்க முயற்சி செய்வது வருந்தத் தக்கது. இது மகாத்மாவின் ஆன்மாவிற்குச் செய்யும் பெருந் துரோகம்.

ஆனால், இந்தியாவிலும் மற்றும் உலக நாடுகளிலும் சில இடங்களிற் சிலர் காந்தியின் கொள்கையைப் பின்பற்றுகின்றார்கள், மேல்நாட்டு அறிஞர் ஒருவர் ''ஊனும் குருதியும் உடைய இந்த மானிடன் எவ்வண்ணம் இவ் அரிய செயல்களைச் செய்தான்'' என்று வியப்புற்றார். புத்தம், கிறிஸ்தவம், இஸ்லாமாதியன போலக் காந்தியின் போதனைகளின் அடிப்படையில் காந்தீயம் என்னும் மதம் ஒன்று தோன்றினாலும் நாம் வியப்படைய வேண்டுவதில்லை.

**கே. சுசானந்தன்**
A/L I B.

# முயன்று பாருங்கள்

கீழே சில வினாக்களும், ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகளும் தருகின்றோம். அவற்றுள் ஒன்று சரியான விடையாக இருக்கும். அதனைக் கண்டு பிடியுங்கள். உங்கள் விடை சரியானதா என்பதை உறுதி செய்ய இறுதிப் பக்கத்தைப் புரட்டுங்கள்.

1. மகாத்மா காந்தி பிறந்த போர்ப்பந்தர் எந்த மாகாணத்தில் உள்ளது?
   அ. உத்தரப் பிரதேசத்தில் ஆ. பம்பாயில் இ. டெல்லியில்.
2. மகாத்மா சித்தி எய்திய உயர் பரீட்சை எது?
   அ. பி. ஏ. ஆ. மற்றிக்குலேஷன் இ. பரிஸ்டர்.
3. அவர் தமது குரு என்று கொண்டவர் யார்?
   அ. பாலகங்காதர திலகர் ஆ. டோல்ஸ்டோய்
   இ. கோபாலகிருஷ்ண கோகலே.
4. காந்திக்கு எத்தனை பெண் மக்கள் உளர்?
   அ. ஒருவர் ஆ. அவருக்குப் பெண் குழந்தையே பிறக்கவில்லை.
   இ. மூவர்.
5. காந்திக்கு மகாத்மா பட்டம் வழங்கியவர் யார்?
   அ. மகாகவி ரவீந்திரநாத் தாகூர் ஆ. மோதிலால் நேரு
   இ. சித்ரஞ்சன்தாஸ்.
6. அவர் காங்கிரஸ் மகாநாட்டிற்கு எந்த ஆண்டிலே தலைமை தாங்கினர்?
   அ. 1895
   ஆ. அவர் காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கியதில்லை
   இ. 1912.
7. காந்தியை அரைநிர்வாணப் பக்கிரி என்றுரைத்தவர் யார்?
   அ. 5 ஆம் ஜோர்ஜ் மன்னர் ஆ. லூயி பிஷர்
   இ. வின்ஸ்டன் சேர்ச்சில்.
8. காந்தி தெய்வமாக எதனைக் கொண்டார்?
   அ. அஹிம்சை ஆ. சத்தியம் இ. தரித்திர நாராயணன்.
9. காந்தியால் 'குருதேவ்' என்று கௌரவிக்கப்பட்ட பெரியார் யார்?
   அ. ரவீந்திரநாத தாகூர் ஆ. வினோபா பாவே இ. விவேகானந்தர்.

10. காந்தி மிகுதியும் விரும்பிப் படித்த 'Unto This Last' என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ. டோல்ஸ்டோய் ஆ. ரஸ்கின் இ. வாஷிங்ரன் இர்வின்.

11. காந்தியின் மகன் தேவதாஸ் தென்னகப் பெரியார் ஒருவரின் மகளைக் காதலித்துத் திருமணம் புரிந்தார். அப்பெரியார் யார்?

அ. ஸ்ரீனிவாச சாஸ்திரி ஆ. இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி)
இ. கஸ்தூரிரங்க ஐயங்கார்.

12. காந்தி வழக்கறிஞர்த் தொழிலை எங்கு நடாத்தினர்?

அ. டெல்கியில்
ஆ. தென்னுபிரிக்காவில் உள்ள ஜோகானஸ்பேக் நகரில்
இ. பம்பாயில்.

13. 1931 இல் லண்டனில் நடந்த வட்டமேசை மகாநாட்டில் மகாத்மாவோடு கலந்துகொண்ட பெரியார் யாவர்? அவர் அமைத்த பல்கலைக் கழகம் எது?

அ. இராஜகோபாலாச்சாரி, சென்னைப் பல்கலைக் கழகம்
ஆ. மோதிலால் நேரு, அலகபாத் பல்கலைக் கழகம்
இ. பண்டித மதன்மோகன மாளவியா, காசிப் பல்கலைக் கழகம்.

14. காந்தியை இங்கிலாந்திலே சந்தித்து உரையாடிய உலகப் பிரசித்தி பெற்ற நகைச் சுவை நடிகர் யார்?

அ. பொப் ஹோப் ஆ. சாளி சப்ளீன் இ. றெட் ஸ்கெல்டன்

15. உப்புச் சத்தியாக்கிரகம் என்றல் யாது?

அ. உப்பையே உணவிற் சேர்ப்பதில்லை என்று விரதம் எடுத்தல்.

ஆ. தொண்டர்களுடன் கால்நடையாக யாத்திரை செய்து, கடற்கரை சென்று, கடல்நீரை மொண்டு உப்புக் காய்ச்சுதல். இது பிரிட்டிஷாரின் உப்புவரியை எதிர்த்து நடத்திய சாத்துவிகப் போராட்டம்.

இ. உப்பு விற்குமிடங்களிலே அதை விற்கக்கூடாது என்று கடைகளின் முன்னிருந்து மறியல் செய்தல்.

16. காந்தி வகுத்த வார்தாக் கல்வித்திட்டத்தைச் செயற்படுத்த உதவிய யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் யாவர்?

அ. திரு. சபாபதி சோமசுந்தரம் ஆ. திரு. ஹன்டி பேரின்பநாயகம்
இ. திரு. அரியநாயகம்.

17. கிராமங்களில் வாழும் ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு உதவ, மகாத்மா, அவர்களை எந்தத் தொழிலில் ஈடுபடச் சொன்னர்?

அ. சிறு வியாபாரம் ஆ. கைத்தறி நெசவு
இ. தோட்டப் பயிர்ச்செய்கை.

18. கைத்தறியிலே செய்யப்பட்ட கதர்த்துணியையே இந்திய மக்கள் அணிதல் வேண்டும் என அவர் வற்புறுத்தியதேன்?

அ. மில் துணிகளின் இறக்குமதியால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப் படுகிறது என்பதால்.

ஆ. யந்திரங்களின் மீது கொண்ட வெறுப்பினுல்.

இ. சுதந்திரம் பெறுவதற்கு அது சுலபமான வழி என்பதால்.

19. காந்தியைச் சுட்ட பாதகனின் முழுப்பெயர் யாது?

அ. கோபாலராம் விநாயக கோட்சே.

ஆ. நாதுராம் விநாயக கோட்சே.

இ. கோவிந்தராம் விநாயக கோட்சே.

20. 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தினை அவர் எந்த ஆண்டிலே தொடக்கி வைத்தார்?

அ. 1927 இல் ஆ. 1931 இல் இ. 1944 இல்.

21. இந்தியாவின் சுதந்திரத் திருநாள் ஒவ்வோராண்டும் எத்திகதியிலே கொண் டாடப்படுகின்றது?

அ. ஜனவரி 30 இல் ஆ. ஜூலை 2 இல் இ. ஆகஸ்ட் 15 இல்.

22. காந்தி மகானின் பிரார்த்தனைக் கூட்டத்திலே பிரசித்திபெற்ற கீதம் எது?

அ. ஜன கண மன ஆ. ரகுபதி ராகவ ராஜா ராம்

இ. வைஷ்ணவ ஜனதோ.

23. தமிழ்நாட்டில் காந்தி நினைவு நிலையம் எங்குள்ளது?

அ. சென்னையில் ஆ. சிதம்பரத்தில் இ. மதுரையில்.

24. காந்தியடிகள் 'முழத் துண்டு' உடை அணியத் தொடங்கியது எந்த ஆண் டில்? எவ்விடத்தில்?

அ. 1910 இல், பிஹாரில் ஆ. 1921 இல், மதுரையில்

இ. 1925 இல், அசாமில்.

25. காந்தியிலும் ஒரு மாதம் மூத்தவர்; பழுத்த மிதவாதி; காந்திக்கு மிக வேண்டியவர்; தமது ஆங்கில அறிவால் பார் புகழ்பெற்றவர்; இவர் யார்?

அ. மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி ஆ. தீரர் சத்தியமூர்த்தி

இ. விபின் சந்திர பாலர்.

* * *

தொழில்களைத் தொடங்காமல் இருப்பதனுல் மனிதன் செயலற்ற நிலை அடைவதில்லை; வெறும் சந்நியாசத்தால் மனிதன் ஈடேற்றம் பெற்றுவிட மாட்டான்.

— பகவத் கீதை.

# ஒற்றுமை கண்டு மகிழுங்கள்

கடவுளை அறிவால் அறியமுடியாது. அறிவு சிறிது தூரந்தான் விடயத்தை விளக்கிக் காட்டும். நம்பிக்கை மூலமாகவும் நம்பிக்கையால் பெறும் அனுபவ வாயிலாகவுந்தான் கடவுளை அறியமுடியும். **( காந்தியடிகள் )**

ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள்சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீரிறையே வந்து சார்மின்களே. **( சம்பந்தர் )**

சரீர சுத்தம் மனச் சுத்தத்திற்கான முதற்படியேயாகும். புறத்திலுள்ள அழுக்கை விட அகத்திலுள்ள அழுக்கே அதிக அபாயகரமானது. நாம் நூற்றுக்கு நூறு நமது சிந்தனையிலும் செய்கைகளிலும் சுத்தமாயிருக்க வேண்டும்.
**( காந்தியடிகள் )**

**மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.**

**அழுக்காற வாவெகுளி யின்னாச்சொல் நான்கு
மிழுக்கா வியன்ற தறம்.** **( திருவள்ளுவர் )**

கீதையை வழிபடுதல் கிளிப்பிள்ளையைப் போல் பாராயணஞ் செய்வதன்று. அதன் உபதேசப்படி நடப்பதேயாம். உபதேசப்படி நடப்பதற்குத் துணையாக உபயோகித்தால் மட்டுமே பாராயணம் நன்றாகும். ஒருவர் சொற்படி எவ்வளவுக்கு எவ்வளவு நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவே அவரை வழிபட்டவர்களாவோம். **( காந்தியடிகள் )**

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். **( திருவள்ளுவர் )**

என்னுடைய சுபாவம் அதிகமாகச் செயல்புரிவதில் ஈடுபடுவதேயாகும். என்னுடைய கடமையென்று எதைத் தீர்மானிக்கிறேனோ அதையே செய்கிறேன். நான் எதைச் செய்தாலும் சேவை செய்யும் நோக்கத்துடனேயே செய்கின்றேன்.
**( காந்தியடிகள் )**

என்க டன்பணி செய்துகி டப்பதே. **( அப்பர் )**

இன்று எதைச் செய்கிறேனோ அதையே நாளையுஞ் செய்வேன் என்றும், இன்று எதை நம்புகிறேனோ அதையே நாளையும் நம்புவேன் என்றும் என்னால் உறுதி கூறமுடியாது. கடவுள் ஒருவர்தாம் எல்லாம் அறிபவர். மனிதன் எப்பொழுதும் குறைபாடு உடையவனே. மனிதனனவன் கடவுள் சாயலாகச் சிருட்டிக்கப்பட்டவனாக இருந்தபோதிலும், கடவுளுக்கும் அவனுக்கும் வெகுதூரம் உண்டு. கடவுள் கட்புலனுக் கெட்டாதவர். ஆதலால், நாம் செய்யக்கூடிய எல்லாம் நாம் யாரைக் கடவுளமிசம் பொருந்தியவர் என்று கருதுகிறோமோ, அவரு

டைய சொல்லையும் செயலையும் அறிய முயல்வதேயாகும். நாம் அவருடைய சொல்லையும் செயலையும் நம்முடைய உள்ளத்தில் நிறைந்து நிற்கச் செய்துகொண்டு, நம்முடைய இதயம் ஒப்புகின்ற அளவிற்கு அவற்றின்படி நடக்க முயல வேண்டும்.

(காந்தியடிகள்)

பூதங்க டோறுநின் றுயெனி னல்லாற்
போக்கிலன் வரவில ளெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னு
சிந்தனைக் கும்மரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

உடையா ளுன்ற னடுவிருக்கு
முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு
மிருப்ப தானு லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ண முன்னின்றே.

(மணிவாசகர்)

## காந்தியடிகளும் மாணவர்களும்

### மாணவர் மாண்புடன் வாழக் காந்தியடிகள் வழங்கிய அறிவுரை:

மாணவர்கள் கல்வி கற்கும்போது தூய்மையும் உண்மையும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அவ்வியல்புகள் இல்லாத கல்வி முற்றும் பயனற்றதாகிவிடும். எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றிலும் பரிசுத்தமானவர்களாக விளங்க வேண்டும். இல்லையேல், எவ்வளவுதான் படிந்திருந்தாலும், அதனுல் பயனேயில்லை. அவர்களுடைய வாழ்க்கை பாழடைதல் ஒருதலை.

ஆடம்பரமான வாழ்க்கையை மேற்கொள்ளுவது மரணத்தை நிச்சயமாக வரவேற்பதாகும். எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையுமே எமக்கு வேண்டியவை.

உரோமாபுரி வாசிகள் சுகானுபவத்தை ஒரு பழக்கமாக்கிக் கொண்டு அழிந்து போனுர்கள். எழுதுவதாலோ, படிப்பதாலோ, நாள் முழுவதும், பிரசங்கங்கள் செய்துகொண்டிருப்பதாலோ மனிதன் தன்னுடைய புத்தியை வளர்த்துக்கொள்ள முடியாது. தினசரி எட்டு மணி நேரவீதம் நாட்கணக்கில், மாதக் கணக்கில் நான் உடலுழைப்பில் ஈடுபட்டிருக்கிறேன். அதனுல் எனக்குப் புத்தி மந்தம் ஏற்பட்டதாக நான் நினைக்கவில்லை.

நமது நாட்டில் உடலுழைப்பு ஒரு கீழ்த்தரமான வேலையென்று கருதப்படுகிறது. உடலுழைப்புத்தான் மனிதனுகப் பிறந்தவனின் மிக்க உயர்வான பணி.

உடலுழைப்புச் செய்பவர்கள் சமூக அந்தஸ்தில் கீழானவர்கள் என்ற கொடிய மனப்பான்மையிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது நாம் நூற்க வேண்டும்.

உடம்பை உறுதியுடையதாக வைத்திருக்க வேண்டும். அதுவே கடமையைச் செய்வதற்குக் கருவியாகவிருக்கின்றது. ஆகையால், அதைப் புறக்கணிக்க முடியாது. அதை நல்ல நிலைமையில் பலமாக வைத்திருக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொரு மாணவனுக்கும் உடற் பயிற்சி அவசியம்.

குழந்தையின் சக்திகள் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தியடைய வேண்டும். அதே சமயத்தில் கையெழுத்தை ஒரு தனிக் கலையாக அபிவிருத்தி செய்ய ஊக்கம் வேண்டும். இன்று பெரும்பாலான மாணவர்களின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கிறது. அதைப் படித்துப் பார்ப்பதென்றாலே வேதனையாக இருக்கிறது. இதை அனுபவத்திலிருந்தே நான் சொல்லுகிறேன். என்னுடைய கையெழுத்தைப் பார்க்க எனக்கே வெட்கமாக இருக்கிறது. பக்குவம் செய்யப்படாத உணவை ஒருவர் சாப்பிட்டு ஜீரணம் செய்யமுடியாது. அதைப் போலவே திருத்தமற்ற கையெழுத்தை யாரும் சகிக்கமுடியாது.

மாணவர்கள் தாமே முன்வந்து கருமங்கள் ஆற்றுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அவர்கள் தாமே சிந்தித்துப் பார்க்கவும், செயலாற்றவும் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் முற்றிலும் கீழ்ப்படிதலும் கட்டுப்பாடும் உடையவர்களாக இருக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சுதந்திரம் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கட்டுப்பாடும் பணிவும் இருக்க வேண்டும். கட்டுப்பாடின்று ஆள்வாரிலி மாடுபோல நடப்பது தனக்கும் பக்கத்திலிருப்பவர்க்கும் கேடு விளைவிக்கக்கூடியதாகும். மாணவர் தம்முடைய பள்ளிக்கூட நாட்களில் கட்டுப்பாட்டை வளர்க்காவிட்டால் அவர்களுடைய கல்விக்காகச் செலவிடப்படும் பணமும் நேரமும் தேசத்திற்கு நட்டமேயாகும்.

மாணவர்களின் வாழ்க்கை சந்நியாசிகளுடைய வாழ்க்கை போன்றதாகும். ஆகையால் ஒரு பிரமசாரிக்கேற்றவாறு முழுமையான பரிசுத்தத்துடனும் ஒழுக்கத்துடனும் வாழ்க்கை நடத்த வேண்டும்.

மனிதன் கடவுளின் பிரதிநிதி. உயிர் வாழும் பிராணிகள் யாவற்றிற்கும் சேவை செய்து கடவுளின் பெருமையையும் அவருடைய கருணையையும் எடுத்துக் காட்டுவது மனிதனின் கடமை. சேவை செய்வதே மனிதனின் ஒரே ஆனந்தமாக இருக்கட்டும். அப்புறம் வாழ்க்கையில் வேறு எந்தச் சுகானுபவமும் வேண்டியதில்லை.

மாணவர்கள் முதலிற் கற்றுக்கொள்ள வேண்டியது பணிவேயாகும். அதுவே கல்வி, அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அவர்கள் பெரிய பட்டங்களைப் பெறலாம்; பெரிய பதவிகள் பெறலாம்; ஆனால், அவர்கள் தம்முடைய அறிவை மனிதர்களுக்குச் சேவை செய்யப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினால் பணிவு மிகவும் அவசியம்.

நம் நாட்டில் ஒவ்வோரிளைஞனுக்கும் விவசாயமும் கைத்தறி நெசவும் ஓரளவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆயுதங்களைச் சரியாக உபயோகிக்கத் தெரிந்து கொள்வது, ஒரு துண்டுப் பலகையை நேராக அறுக்கக் கற்றுக்கொள்வது, ஒரு

நல்ல வீட்டுச் சுவர் எழுப்பத் தெரிவது ஆகியவற்றில் பயிற்சிபெறுவதால் அவனுக்கு ஒன்றும் நட்டமில்லை; இத்தகைய பயிற்சிபெற்ற ஒரு பையன் உலகத்துடன் நாம் எப்படிப் போராடுவது என்று கவலைப்படமாட்டான். வேலையற்றும் இருக்க மாட்டான்.

தாய்மொழியை அவமதிப்பது, ஒருவன் தன்னுடைய தாயை அவமதிப்பது போல் மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். தாய்மொழியை அவமதிப்பவன் தேச பக்தனல்லன். ஆழ்ந்த கருத்துக்களையும், சிந்தனைகளையும் வெளியிடுவதற்குப் போதுமான அளவு நம் மொழிகள் வளம் பெற்றிருக்கவில்லையென்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால், அது மொழியிலுள்ள குறைபாடன்று. ஒரு மொழியை வளம்பெறச் செய்வது அந்த மொழியைப் பேசுவோரது பொறுப்பாகும். ஆங்கில மொழியும் ஒரு காலத்தில் வளமற்றதாகத்தானிருந்தது. அந்த மொழியைப் பேசுபவர்கள் முன்னேற்றமடைந்து தமது மொழியையும் வளம்படுத்த முயன்றார்கள். அதனால் அதுவும் முன்னேற்றமடைந்தது. ஆங்கிலத்தின் மூலந்தான் உயர்ந்த சிந்தனைகளை வெளியிட முடியும் என்று நினைத்துக்கொண்டு நம்முடைய மொழியை வளம் படுத்தாமலிருப்போமானால், நாம் என்றென்றும் அடிமைகளாகவேதான் இருப்போம்.

நல்லவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் உள்ளவர்களின் சேர்க்கையையே நாடவேண்டும். மனிதவர்க்கத்திற்கு ஆக்கமளித்து ஊக்குவிக்கும் நூல்களையே படிக்கவேண்டும். ஏதாவது ஒரு புத்தகத்தை உங்களுடைய வழிகாட்டியாக எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும்.

## காந்தியடிகளும் கலையும்

எந்தக் கலை மனிதனை மனிதன் ஆக்குமோ அந்தக் கலையைக் கற்பிக்கும் நிலையமே உண்மையான பல்கலைக்கழகம். தூயவாழ்வே உண்மையானதும் உன்னதமானதுமான கலையாகும்.

நான் சாத்திரங்களைப் படியாதவன்; ஆயினும், சாத்திரங்களின் உட்கருத்தை அறிந்தவன் என்று தைரியமாகக் கூறுவேன். நான் கலைகளைக் கற்காதவன்; ஆயினும், என் வாழ்வு உண்மையிலேயே போதுமான கலை நிரம்பியது என்று உறுதியாகக் கூறுவேன்.

மனிதன் மனிதனாக வாழவேண்டிய முறையில் வாழ்வதே கலைகளின் உயிர் நாடி. அதுவே அறிவின் சிகரம், அது யாதெனில், தன்னைத்தான் அறப்பெறுவதேயாகும்.

சுயநலம் விட்டுப் பொதுநலங் கருதும் மனிதன் ஆவதற்கு மேற்கொள்ள வேண்டியது எளிய ஆடம்பரமற்ற வாழ்க்கையாகும். எளிய வாழ்க்கையென்பது பிறர் உழைப்பை உபயோகியாமல் வாழ்வதேயாகும்.

எளிய வாழ்க்கை வாழவேண்டும் — பிறர் உழைப்பை உபயோகிப்பதைக் குறைக்கவேண்டும் — பிறரிடம் அனுதாபம் உடையவராக நடந்துகொள்ள வேண்டும் — சுயநலத்தைச் சுருக்கவேண்டும் — என்ற எண்ணம் சிறிதுமில்லாதவர் எந்தப் பட்டங்கள் பெற்றிருப்பினும், அவர்கள் ''அணிகள் வேய் பிணத்தோடொப்பர், அன்னவர் வாழ்க்கை பாழாம்.''

## காந்தியடிகளும் கடவுளும்

என்னைச் சூழ்ந்துள்ளவை யாவும் நிலையற்றவை என்பதை நான் உணர்கின்றேன். ஆனால், இந்த நிலையின்மைக்கு உள்ளே நிலையுள்ள ஒரு ஜீவதத்துவம் இருந்து, அனைத்தையும் ஊடுருவிச்சென்று, படைத்தும், அழித்தும், மீண்டும் படைத்து வருகிறதென்பதை நான் காண்கின்றேன். அறிவுமயமான அந்தத் தத்துவமே கடவுள். அசத்தினிடையிலே சத்து இருக்கிறது; அழிவின் மத்தியிலே அழியாத வாழ்வும் இருக்கிறது; இருளின் மத்தியிலே ஒளியும் விளங்குகிறது; ஆகவே, அக்கடவுள் பூரண அருள் வடிவுடையன் என்றே நான் கருதுகிறேன். ஆதலால் கடவுளே சத்தியம்; அவரே ஒளி என்றும் நான் முடிவுசெய்கிறேன். அன்பே கடவுள்.

உண்மையே கடவுள். அஹிம்சை மார்க்கமே அவனை அடையும் மார்க்கம். எத்தனை எத்தனை முனிவர்களும், தவஞ் செய்வோரும் இமயமலைச் சாரலில் பல நூற்றாண்டுகளாக மோனத் தவமிருந்து, ஆண்டவனைப்பற்றிய உண்மையை அவனிடமிருந்து அறிந்துவிட முயன்றார்கள்? அவர்கள் தவத்தின் பலனாக உண்மையே கடவுள், அஹிம்சை மார்க்கமே அவனை அடையும் மார்க்கம் என்பதைக் கண்டார்கள்.

எனக்கு நேர்ந்த சத்திய சோதனைகளிலெல்லாம் கடவுளே என்னைக் காப்பாற்றினார். வளியும் நீரும் இல்லாமற் கூட நான் வாழ்வேன்; ஆனால், ஆண்டவன் இல்லாமல் வாழவே முடியாது.

## வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் சுவைமிக்க சம்பவம் ஒன்று

ஒருநாள் காந்தியடிகள், பலநாட்களாகப் போற்றிக் காப்பாற்றிய ஒரு கட்டைப் 'பென்சில்' குச்சியைக் காணாது தேடினார். அவர் தமது 'பென்சிலை'த் தேடுகிறார் என்ற செய்தி பரவியது. ஆச்சிரமவாசிகள் அதைத் தேடத் தொடங்கினார்கள். அதை எங்கும் காணவில்லை. ஆகவே, யாரோ ஒருவர் ஒரு புதுப் பென்சிலைக் கொண்டுவந்து கொடுத்தார்.

''இது வேண்டாம். எனக்கு என் கட்டைப் 'பென்சில்'தான் வேண்டும்'' என்றார். எனவே, வேறொரு கட்டைப் ''பென்சிலை'' ஒருவர் கொண்டுவந்து கொடுத்தார்.

''இன்னொருவருடைய கட்டைப் 'பென்சிலை'க் கொண்டு என்னைத் திருப்தி செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் உங்கள் குழந்தையை இழந்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பதிலாக வேறொரு குழந்தையைக் கொண்டுவந்து கொடுத்தால் மகிழ்வீர்களா?'' என்றார்.

பின்னர், மூலை முடுக்கெல்லாம் தேடினார்கள். கட்டைப் பென்சிலும் கடைசியில் கண்டுபிடிக்கப்பட்டது. பெருமிதத்துடன் கொண்டுவந்து கொடுத்தார்கள். அடிகளின் முகம் புன்னகையால் மலர்ந்தது.

## வாழ்வும் மதமும்

வாழ்வின் ஒவ்வோர் அமிசத்திலும் மதம் இடம்பெறுகிறது. மனிதன் செய்யுங் காரியங்கள் அனைத்தும் பிரிக்கமுடியாத ஒரே உருவமாக அமைந்துள் ளன. சமூக, பொருளாதார, அரசியல், மத வேலைகளைத் தனித்தனியே பிரிக்க முடியாது. மனித முயற்சிகளுக்குப் புறம்பாகத் தனித்திருக்கும் மதம் எப்படி யிருக்கும் என்று எனக்குத் தெரியாது. எல்லாக் காரியங்களுக்கும் மதந்தான் தார்மிக அடிப்படையாக அமைகிறது. மதமில்லாவிடில் அவை தார்மிக அடிப் படையை இழந்து அருத்தமற்ற கூச்சலும் பரபரப்பும் நிறைந்தவையாய் விடும்.

தொகுப்பு:- திரு. க. செல்லத்துரை

---

# காந்தி நூற்றுண்டு விழா

## பேச்சுப் போட்டி

ஷை பேச்சுப் போட்டி 7-10-69 செவ்வாய்க்கிழமை பி. ப. 3-45 மணிக்கு, குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. மாணவர் பலர் கலந்து கொண்ட னர். முதற்பரிசு பெற்ரோர் விபரம் வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

செல்வன் வ. கி. சிவபாலன் 8 E.

**நடுப்பிரிவு**

செல்வன் பொ. இரகுபதி 9 C.

**மேற்பிரிவு**

செல்வன் த. நடேசலிங்கம் A/L 2 D.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். போட்டியில் நடுவராகக் கடமை யாற்றிய ஆசிரியர்கள் யாவருக்கும் எமது நன்றி.

# அண்ணல் காந்தியும் அஹிம்சாதர்ம வாழ்வும்

மனிதனிடம் தெய்வத் தன்மையுமுண்டு; விலங்குத் தன்மையுமுண்டு. தெய்வத் தன்மை முழுவதும் விளங்கப்பெற்றவர்கள் ஒரு சிலரேயாவர். சத்தியாக்கிரக நெறி, மனிதனிடம் தெய்வத் தன்மையை விளங்கச் செய்யக்கூடிய நன்னெறியாகும். மனிதன் இறைவனுடன் தொடர்பு கொண்டு வாழும் சத்தியாக்கிரக வாழ்வே சமயவாழ்வாகும். சமயவாழ்வின் அடிப்படையிலேயே அஹிம்சாதர்மம் அமைகின்றது. அஹிம்சாதர்மத்தில் எல்லாத் தர்மங்களும் அடங்கும். இதனுலேயே இது யாவராலும் போற்றப்படுகின்றது. உலகிற்றேன்றிய மெய்ஞ்ஞானிகளனைவரும் மன்னுயிரெல்லாந் தன்னுயிரென மதிக்கும் சமய நெறிகளை உணர்த்திப் போந்தனர். உலகில் உள்ள சமயங்கள் எல்லாம் அஹிம்சாதர்மத்தை வலியுறுத்துவது பெரிதும் ஆராயத்தக்கது. பெயரளவில் சமயங்கள் பலவாக இலங்கினும், அவையாவும் அஹிம்சாதர்மமெனும் கொள்கையில் ஒன்ருய் ஒளிர்வதன் நுட்பத்தை உன்னி உணர்ந்து உலகோர்க்கு உபதேசித்தார் உத்தமர் காந்தி.

அண்ணல் காந்தியின் அஹிம்சாதர்ம வாழ்வை உன்னி உணர்ந்தோர்க்குப் பல சமயத் தோற்றமே நிகழாது. அவர்களுக்கு அஹிம்சாதர்மமெனும் ஒரே சமயமே புலனுகும். சமயமாவது சத்தென்னும் செம்பொருட்டொடர் புணர்ந்து மக்கள் வாழும் நெறியாகும். இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பு தெரியாத சிலர் சமயமெனும் பெயரால் ''என் தெய்வம் உன் தெய்வம்'' எனப் பாகுபடுத்தி வாதப் போரிடுகின்றர். அன்னர் அன்பை, அருளை, ஆண்டவனை வழிபடுபவர்களல்லர். காந்தியடிகளோ எம் மதத்தையும் நன் மதமெனக் கண்டார். அம் மத நெறிகளிலெல்லாம் அன்பின் உயர்வையும் சத்தியத்தின் மகிமையையும் கண்டு மகிழ்ந்தார்.

சமய வாழ்வெனும் செந்நெறியில் நின்றேர் நாட்டு மக்களுக்கேற்ப அவர்கள் தம் மொழிகளுக்கேற்பச் சமய நெறிகளை வகுத்துச் சென்றனர். அவைகளைத் துருவி ஆராய்ந்தால் கடவுள் என்பது எங்கும் நீக்கமற நிறைந்த அன்புப் பொருளென்பதும், அதை அடைதற்குரிய வழி அஹிம்சா தர்மமெனும் அருநெறி யென்பதும் செவ்வனே விளங்கும். இதனுலேயே காந்தியடிகளும் அஹிம்சா தர்மநெறியினைப் பின்பற்றினுர்.

காந்தியடிகள் ஒழுக்கத்தையே சமயமாகக் கொண்டார். சத்தியத்தைக் கடவுளென மதித்தார். அக்கடவுளை அடைய வைக்கும் நெறியை அஹிம்சையென அழைத்தார். சமயமில்லாத வாழ்வு பற்றுக் கோடில்லாததெனக் கண்டார். அவரது சமயம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது. அஃது அன்பன்றி வேறில்லை. ஆண்டவனே அன்பன்றிப் பிறிதில்லை.

சமய வாழ்வு இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் வேண்டியது. அது உலக வாழ்வுடன் ஊடுருவிநிற்பது. இறைவனுடன் ஆக்கிரகித்து நிற்கும் சமய வாழ்வு நம் தலைவராகிய மகாத்மா மீது அரும்பி நிற்கும் திறனை ஈண்டு நோக்கு

வோம். அடிகளின் சமய வாழ்விற்குத் துணைநின்றது அவரது இளமை வாழ்வில் அரும்பிய வாய்மையாகும். அடிகளாரை இந்நன்னெறியின்கண் நிறுத்திய நூல்களுட் சிறந்தது பகவத் கீதையாகும். காந்தி அடிகளுக்குச் சமய வாழ்வு கால் கொண்ட இடம் தென்னாபிரிக்காவென்பது அவரது வாழ்க்கை வரலாற்றால் அறியக் கிடைக்கிறது. அவர் ஆற்றிய தொண்டுகள் யாவும் சமயத் தொண்டின்பாற் பட்டனவென்று உலகம் புகழ்கின்றது.

காந்தியடிகள் இறைவனுடன் தொடர்பு கொண்டு அன்புநெறி நிற்றலால் அவர் எதற்கும் அஞ்சுவதில்லை.

''அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை'' என்ற அப்பரின் அருள்வாக்கு அடிகள் வாழ்வில் ஒளிர்வதைக் காணலாம். மனித வாழ்விற்குச் சமயம் ஒளிபோன்றது. இந் நெறியின் நுட்பங்களை நம்மவர் மறந்திருந்த காலத்தில் காந்தி அடிகள் அவற்றைச் சொல்லாலும், செயலாலும் உணர்த்திப் போந்தார். அடிகளின் அறிவுரைகளை உலகத்தோர் ஏற்று நடப்பார்களேயாயின், இனி வரும் உலகம், அஹிம்சாதர்ம மயமாகுமென்பதில் ஐயமில்லை.

ச. சிவகுமாரன்
க. பொ. த. விஞ்ஞான வகுப்பு.

---

கர்மயோகத்தைக் கடைப்பிடிப்பவன், மனம் தெளிந்தவன், உடலை வென்றவன், இந்திரியங்களை அடக்கியவன், தன்னுடைய ஆத்மாவே எல்லா உயிர்களுக்கும் ஆத்மா எனக் காண்கிறவன், அவன் தொழில் செய்து கொண்டிருப்பினும் அதில் ஒட்டுவதில்லை.

*　　　*　　　*

உண்மையறிந்த யோகி, பார்க்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், அருந்தினும், நடக்கினும், உறங்கினும், சுவாசிக்கினும், பேசினும், கண் திறக்கினும், மூடினும் பொறிகள் புலன்களில் போகின்றன என்று உறுதிகொண்டு '' நான் ஒன்றையும் செய்கிறேனில்லை '' என்று நினைப்பான்.

— பகவத் கீதை.

# மகாத்மாவின் வாழ்விலே.......

## அழுதார்

''சனிக்கிழமை, உடற் பயிற்சி வகுப்பிற்கு நீ ஏன் சமுகமளிக்கவில்லை?'' வரவு டாப்பைப் பார்த்தபடி தம் முன்னுல் நின்ற பதினுன்கு வயதுச் சிறுவனிடம், கடுமையாகக் கேட்டார் தலைமையாசிரியர்.

''நோயாளரான என் தந்தைக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தேன். என்னிடம் கடிகாரம் இல்லை. மூட்டம் போட்டிருந்த மேகக்கூட்டம் என்னை ஏமாற்றிவிட்டது. நேரம் தெரியவில்லை. நான் வகுப்பிற்கு வந்தபொழுது மாணவர் போய்விட்டனர்.''

''நீ பொய் சொல்கிருய்?'' தலைமையாசிரியர் வெகுளியோடு கூறினுர் இவ்வாறு.

இது நடந்தது 1883 இல்; நடைபெற்ற இடம், மேற்கிந்தியாவிலுள்ள, சிறிய சமஸ்தானமான ராஜ்கோட்டின் அல்பிரெட் உயர்நிலைப் பள்ளியில்.

டோராப்ஜி எடல்ஜி கிமி என்னும் பெயருடைய தலைமையாசிரியர் மிகவும் கடுமையானவர். அவர் மேல்வகுப்பு மாணவருக்கு உடற் பயிற்சியைக் கட்டாயமாக்கியிருந்தார். உடற் பயிற்சி வகுப்பிற்குச் சமுகமளியாதவர்களை அவர் எக்காரணங் கொண்டும் மன்னிப்பதில்லை.

அன்று அவரின் கடுஞ் சொல்லுக்கு ஆளானவர் மோகனதாஸ் காந்தி; அச் சிறுவர் தாம் பொய்யர் என்று குற்றஞ்சாட்டப்பட்டதால் தாங்கொணுத துயரடைந்தார். தாம் சொல்லும் உண்மையைத் தலைமையாசிரியர் நம்புமாறு செய்ய இயலவில்லையே என்று, அவர் அநாதரவாக நின்று கண்ணீர்விட்டழுதார்.

நீண்ட சிந்தனையின்பின் அவர் வந்த முடிவு இது. ''உண்மை பேசுவோன் மிகக் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். இனி எக்காலத்திலும் நான் சொல்கின்ற உண்மை, பொய்யானது எனத் தள்ளப்படக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக மாட்டேன்.''

**(மகாத்மா காந்தி — ஒரு வரலாறு — பி. ஆர். நந்தா)**

## சிறையில் வளர்ந்த செந்தண்மை

1908 ஆம் ஆண்டு, தென்னுபிரிக்காவிலுள்ள திருன்ஸ்வால் சிறைக் கூடத்திலே, தென்னுபிரிக்க இந்தியரின் உரிமைப் போராட்டதிற்குத் தலைமை தாங்கிய குற்றத்திற்காக மகாத்மா சிறை வைக்கப்பட்டிருந்தார். அவர், 'கொடூரமான பார்வையும், கொலையுணர்வும், இழிதன்மைகளும், இரக்கமின்மையுமே' உருவான பயங்கரக் குற்றவாளிகளோடு சிறையின் முதலிரவைக் கழிக்க நேரிட்

டது. அந்தச் சூழ்நிலையில் இரவு முழுவதும் அவர் கீதையிலுள்ள மகாவாக்கியங்களைத் திரும்பத் திரும்பச் செபித்த வண்ணமிருந்தார். காந்தியின் சிறைவாழ்விலே, இவைபோன்ற கொடூரமான அநுபவம் நிறைந்த நாட்கள் வேறெப்போதும் ஏற்பட்டனவல்ல. காலை ஏழு மணிக்கு அவர் மற்றைய குற்றவாளிகளோடு அழைத்துச் செல்லப்பட்டு, பிக்கானல் தரையைக் கொத்துகின்ற கடும் உழைப்பினை மேற்கொள்ள நேரிட்டது. எனினும் அவர் தமது உற்சாகத்திலே தளரவில்லை. குனிந்த நிலையில் பிற்பகல்வரை வேலை செய்ததால், இடுப்பு வலியேற்பட்டதையும், கைகள் நோவெடுத்ததையும் பொருட்படுத்தாது; அவர், களைத்துச் சோர்ந்திருந்த மற்றைக் கைதிகளை ஊக்கி, உற்சாகமளித்த வண்ணமிருந்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளில் காந்தி, சிறையிலே தமக்குக் கிடைத்த கீதையிலிருந்தும், ரஸ்கின், தோறு முதலானோரின் நூல்களிலிருந்தும் பல பகுதிகளைத் தம் சக கைதிகளுக்குப் படித்துக்காட்டி விளக்கம் செய்வார். கடுமையான சிறையின் நாளாந்த வேலைகளின் துன்பத்தினை, மனித இன சேவைக்கான பணிக்கு வருந்துகின்றதோர் இன்பமாக மாற்றிக்கொள்வதில் அவர் வெற்றி பெற்றார்.

சிறைவாழ்வு அவரின் ஆளுமையை வளர்த்ததோடு, துன்பத்தைத் தாங்கும் உருக்கனைய வலிவையும் அவருக்கு அளித்தது. ''ஒவ்வோரு முறையும் சிறையிலிருந்து வெளிவருகையில், முன்னரிலும் உயர்ந்ததும், விளக்க முடியாததுமான ஒரு சக்தி அவரிலே குடிகொள்வதை எம்மால் உணரக்கூடியதாக இருக்கிறது'' என அவரின் சகாவும், நண்பருமான போலக் குறிப்பிடுகின்றார்.

(மகாத்மா காந்தி — ஒரு வரலாறு — பி. ஆர். நந்தா)

## விளங்காத மொழியில் கடிதப் போக்குவரத்து

வங்க மகாகவி தாகூரின் சாந்திநிகேதனத்தில் வாழ்ந்தவர், டான்-யூன்-ஹான் என்ற சீனப் பேரறிஞர். அவர் திபெத்திற்குச் சென்றிருந்தபோது, திபெத்தின் தலாய்-லாமா, அவரூடாக, காந்திக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் திபெத்திய மொழியிலிருந்தபடியால் டான்-யூன்-ஹான் கூட அதை மொழிபெயர்த்துக் கூறமுடியாமலிருந்தார்.

அவ்வேளையில், காந்திக்கும், சீனப்பேரறிஞருக்குமிடையே நடந்த உரையாடல் இது:

''தயவுசெய்து இக்கடிதம் கிடைத்ததாகப் பதில் கடிதம் எழுதிப் போடுவீர்களா?''

''ஓ......யேஸ்! நிச்சயமாக எழுதுகிறேன். ஆனால், இக் கடிதத்திற்கு என்னால் பதில் எழுத முடியாது. ஏனெனில், இதிலுள்ள விஷயம் என்னவென்று எனக்குத் தெரியாது. எனக்குத் திபெத்திய மொழி தெரியாதாகையால், நான் குஜராத் மொழியில் பதில் எழுதப் போகிறேன். அப்போதுதான் தலாய்-லாமாவும் என்னைப்போல் பாஷை தெரியாமல் விழித்துத் திண்டாடுவார். நான் இங்கே சிரிப்பதைப்போல அவரும் சிரிப்பார்'' என்றார்.

''பாஷை தெரியாத போதிலும் நீங்கள் இருவருமே ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டிருக்கிறீர்கள். புத்தர் பிரான் கூறியதுபோல் ஞானிகள் ஒருவரை ஒருவர் இதயத்தால் அறிந்துகொள்கிறார்கள். வார்த்தைகளால் அல்ல.''

காந்திஜி, டான்-யூன்-ஹான் அவர்களைப் புன்முறுவலுடன் நோக்கினுர்:

அவர், தலாய்-லாமாவுக்கு எழுதிய கடிதம் குஜராத் மொழியிலேயே இருந்தது.

(கலைக்கதிர் — அக்டோபர் 68 இல் வெளியான ஒரு கட்டுரையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.)

## நீ எனது விருந்தாளி

1927 இல் மகாத்மா இலங்கைக்கு விஜயம் செய்தார். கொழும்பில் அவரை வரவேற்றுத் தமது விருந்தினராக உபசரிக்கும் பெரும் பாக்கியம், நியாய துரந்தரரான சோமசுந்தரம் அவர்களுக்குக் கிடைத்தது. அவர், மகாத்மாவை இலங்கையின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்று, மகாத்மாவின் காதி நிதிச் சேகரிப்புக்கு உறுதுணைவராய் விளங்கினுர். இதன் பயனுக இருவர்க்கு மிடையே நட்பு ஏற்பட்டு வளர்ந்தது.

ஒரு கால், திரு. சோமசுந்தரம், மகாத்மாவின் சபர்மதி ஆச்சிரமம் சென்று அவரின் விருந்தினராகத் தங்கியிருந்தார். மகாத்மாவும், சோமசுந்தரமும் உண வுண்ண, அன்னை கஸ்தூரி உணவு பரிமாறினுர்.

உணவுண்டு முடிந்ததும் திரு. சோமசுந்தரம், தமது தட்டைச் சுத்தஞ் செய்ய எழுந்தபோது, கஸ்தூரிபாய் அதற்குச் சம்மதிக்கவில்லை. சோமசுந்தரத் திற்கு உள்ளங் கூசியது. அவர் தாமே தட்டைச் சுத்தஞ் செய்யவேண்டுமெனப் பிடிவாதம் பிடித்தார். அதற்குக் காந்தி சொன்னுர்: ''சோமு! இப்போது நீ எங்கள் குடிசையில் எங்கள் அதிதியாக வந்திருக்கிருய். நீ யாராக இருந் தாலும் இங்கு இருக்கும்வரை எங்கள் ஆச்சிரமத்தின் கட்டுப்பாட்டு விதி களுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். எங்கள் அதிதிகளின் எச்சில் தட்டுக்களைக் கஸ்தூரிதான் கழுவவேண்டும் என்பது ஆச்சிரம விதி, அதை மீற முயலாதே.''

(சிந்தாமணி 3-10-69 இதழில் வெளியான கட்டுரையிலிருந்து சுருக்கி எழுதப் பட்டது.)

## அரசாங்கத்தின் கைதி

ஏரவாடாவில் காந்திஜியை ராஜாங்க கைதியாகச் சிறைவைத்திருந்ததால், அவருடைய மாதாந்திரச் செலவுக்காக 150 ரூபாயை வழங்கச் சர்க்கார் தீர் மானித்தது. சிறை அதிகாரிக்கு உத்தரவு அனுப்பினுர்கள். சிறை அதிகாரி உடனே, காந்திஜியின் அறைக்குத் தேவையான மேஜை, நாற்காலி முதலிய வற்றை அனுப்பினுர். அதைப் பார்த்ததும் காந்திஜி, ''இவை எதற்கு? எடுத் துச் செல்லுங்கள்'' என்று சிறை அதிகாரியிடம் கூறினுர்.

''உங்களுடைய வசதிக்காக'' என்று தயக்கத்துடன் சிறை அதிகாரி கூறி னுர்.

''என்னுடைய வசதிக்காகச் செலவிடும் தொகை இந்திய சர்க்கார் கஜானுவிலிருந்துதானே வருகிறது? அது இந்திய மக்களுடைய பணந்தானே? அதை வீணுக்க நான் விரும்பவில்லை; என்னைச் சாதாரண கைதியைப்போல நடத்துங்கள். அதற்காக மாதம் முப்பத்தைந்து ரூபாய் செலவழிக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்ருர் காந்திஜி.

சிறை அதிகாரி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தம்முடைய வசதிகளை அதிகரித்துக்கொள்ளக் காந்திஜி விரும்பவில்லை. அதனுல் அவருடைய விருப்பப்படியே, பித்தளைச் செம்பு, தட்டு முதலியவற்றைக் காந்திஜியின் அறைக்கு அனுப்ப அவர் ஏற்பாடு செய்தார்.

(கல்கி — 5-10-69)

*        *        *

## ஆன்ருேர் கூறும் உண்மை

[குஜராத்திக் கவிஞர் ஷாம்லால் பட் என்பார் பாடிய கீழ்வரும் பாடலைச் சிறுவயதில் மகாத்மா காந்தி அடிக்கடி தம்முள்ளே மெல்லப் பாடுவது வழக்கம்.]

ஒருகலசம் நீருக்காய் உணவளித்தல்,
உறுமன்பு மொழிக்கு மாற்ருய்
அருளாளர் அடிவீழ்தல் அரைக்காசிற்
கரும்பொன்னைப் பதிலாய் ஈதல்
பெருவாழ்வை இழந்தேனும் பணிசெய்தல்
இன்சொல்லைப் பரிந்தே கூறல்
இருந்தீமை புரிவோர்க்கும் நன்மைசெயல்
இவையன்ருேர்க் கிதமே யன்ருே?

மூலம்: Mahatma Gandhi, By B. R. Nanda. P 65.
தமிழாக்கம்: 'சோணு'

*        *        *

" நற்காரியங்கள் செய்யும் எவனும் கெட்ட கதி அடைவதில்லை."
— பகவத் கீதை.

# மகாத்மாவைக் கவர்ந்த மூன்று நூல்கள்

கலைக் களஞ்சியங்களாகவும், நடமாடும் நூல்நிலையங்களாகவும் விளங்குவதே கல்வியின் பயன் என்று காந்தியடிகள் கருதவில்லை. கற்பவை கற்றுக் கற்றாங்கு ஒழுகுதலே அவரின் தலையாய குறிக்கோளாய் இருந்து வந்தது. வாழ்வாகிய பரிசோதனைக் கூடத்திலே சத்தியத்தை நாள்தோறும் இடைவிடாது சோதித்துச் சோதித்து, ஆன்ம பரிசுத்தம் செய்துகொள்வதற்கு எவ்வெந் நூல்கள் துணைக் கருவிகளாய் இருந்து வந்தனவோ, அவ்வந் நூல்களை மட்டுமே அவர் கற்றுப் பயன் செய்துகொண்டார். இவ்வாறு அவர் கற்றவற்றுள் மூன்று நூல்கள் தலையாயவை. அவை, பகவத் கீதை, 'இறைவனின் அரசு உன் உள்ளே இருக்கின்றது' (Kingdom of God is with in you), 'இதன் முடிவு வரை' (Unto this last) என்பனவாகும்.

பகவத் கீதை வியாச பாரதத்தில் உள்ளது, வியாச பாரதம், போரின் பயனின்மையையும், போரிலே வென்றோரும், தோற்றவரளவு கீழ்நிலையை எய்துகின்றமையையும் விளக்க எழுந்தது என்பது, காந்திஜியின் கருத்தாகும். இக் கருத்து எத்துணைப் புரட்சியானதோ, அத்துணைப் புரட்சியானது பகவத் கீதை அஹிம்சையைப் போதிக்க எழுந்தது என்பதுமாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பிதாமகரான பாலகங்காதரதிலகர், இந்திய சுதந்திரத்திற்கு இரத்தஞ் சிந்தும் புரட்சியே வேண்டும் என்னும் தம் கருத்திற்கிசையவும், வரலாற்றடிப் படையிலும், பகவத் கீதைக்கு வியாக்கியானம் செய்தார். ஆனால், மகாத்மாவோ அதே புனித நூலைக் கொல்லாமையின் அடிப்படையிலமைந்த சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு வேண்டிய கருத்துக்களின் கொள்கலமாகக் கொண்டார். விவிலிய வேதத்தின் ஆழ்ந்த செல்வாக்கிற்கு அடிப்பட்டமையால், 'உனது வலக் கன்னத்தில் அடித்தவனுக்கு, உனது இடக் கன்னத்தையும் காட்டு' என்னும் மணிவாக்கின் அடிப்படையில் காந்திஜி, கீதைக்கு வியாக்கியானம் செய்துள்ளார் என அறிஞர்கள் ஐயுறுகின்றனர்.

அஃதெவ்வாறாயினும், அவரின் நீண்டகால சத்திய சோதனையில், பகவத் கீதை அவருக்கு ஒரு துணைக் கருவியாக் உதவிற்று என்பதை மறுத்தல் இயலாது. அவர் கீதையின் சிறப்புப் பற்றிக் கூறுவன பின்வருமாறு:

''கீதை சூத்திரங்கள் அடங்கிய நூலன்று; அது ஒரு மகத்தான தர்மகாவ்யம், அதில் எவ்வளவு நுட்பமான பொருள்கள் காணலாமோ, அப்படியே புதிய அழகான அர்த்தங்களும் செய்து கொள்ளலாம். கீதை பாமர ஜனங்களுக்காக இயற்றப்பட்டது. அதில் ஒரே விஷயம் பலவிதமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் கீதையிலுள்ள மகா வாக்கியங்களின் அர்த்தம் காலத்திற்குத் தகுந்தவாறு மாறிக்கொண்டேயிருக்கும்; அதன் மூலக் கொள்கை ஒருபொழுதும் மாறாது. ஆனால், அந்தக் கொள்கையை அனுஷ்டிப்பதற்கு விரும்பும் மனிதன் மற்ற அர்த்தங்களைத் தனக்குத் தோன்றியவாறு செய்து கொள்ளலாம். ஒரு காலத்திலோ தேசத்திலோ விதியாக இருப்பது மற்றக் காலத்திலும், தேசத்திலும் விலக்காகலாம். பலனில் பற்று மட்டும் எப்பொழுதும் விலக்கு; பற்றின்மை எக்காலமும் விதி. கீதையில் ஞானத்தின் மகிமை நன்கு காப்பாற்றப்பட்டிருக்கின்றது. ஆயினும், கீதை வெறும் மதியால் அறியக்கூடியதன்று; இதயத்தால் அறிய வேண்டியது. ஆகையால், அதனிடத்து நம்பிக்கை யில்லாதவனுக்கு அது உதவாது.''

'இறைவனின் அரசு உன்னுள்ளே இருக்கின்றது' என்ற நூல் ருஷ்ய ஞானியான டோல்ஸ்டோயினுல் எழுதப்பட்டது. கிறிஸ்தவ நண்பர்களால், தமக்குப் படிப்பதற்குத் தரப்பட்ட நூல்களிலே மிகச் சிறந்ததும், பயனுள்ளதும் இந்நூலே என்பது காந்தியின் முடிபு. இந் நூலிலே கிறிஸ்தவ தேவாலயங்கள் தம் மதத்தினைச் சார்ந்த மக்களின் மீது தமது செல்வாக்கினைப் பதிப்பதற்காகக் கிறிஸ்தவ தத்துவங்களினின்றும் வழிவிலகிச் செல்லும் வகைகளை ஆராய்ந்து, சடங்காசார கிறிஸ்தவத்தை டோல்ஸ்டோய் மிகுதியுஞ் சாடுகின்ருர். உண்மையான கிறிஸ்தவ தத்துவங்கள் அவரால் நிறுவப்படுகின்றன. கிறிஸ்தவ போதனைகளுக்கும், கிறிஸ்தவர்களின் நாளாந்த வாழ்விற்குமிடையிலான முரண்பாடுகள் ஆதாரபூர்வமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. டோல்ஸ்டோய், 'நான் எதனை நம்புகிறேன்?' (What I believe?) என்ற தமது வேருெரு நூலிலே, யேசு கிறிஸ்து வணக்கத்திற்கு மாத்திரமுரிய ஒரு மதத்தினைத் தாபித்தவரோ, தனிப்பட்டோரின் இரட்சணியத்திற்கான மத போதகரோ அல்லரென்றும், அவர் தத்துவ ரீதியானதும், ஒழுக்கத் தொடர்பு கொண்டதும், சமூக வாழ்விற்கான கோட்பாடுகளமைந்ததுமான ஒரு கொள்கையை வகுத்தவரென்றும் வாதாடுகின்ருர். இவ்விரு நூல்களும், காந்தியடிகளின் சமயக் கருத்துக்களிலே ஒரு புதிய விழிப்புணர்வையும், நோக்கினையும் அளித்தன எனலாம்.

நேட்டால் நகரிலே, நியாயவாதியாய் அமர்ந்து உயர் வாழ்வு நடாத்திய காந்தியை, சுலுலாந்து என்னும் சிற்றூருக்குச் செல்ல வைத்து எளிமையான வாழ்வு வாழ வைத்த பெருமை, ரஸ்கின் என்பார் எழுதிய 'இதன் முடிவு வரை' என்ற நூலுக்கே உரியதாகும். 1908 இல் லண்டனிலிருந்து தென்னுபிரிக்கா செல்கையிலே, கப்பலில் இருந்துகொண்டே அவர் எழுதிய 'இந்து சுயராச்சியம் அல்லது இந்திய உள்ளாண்மையரசு' (Hindu Swaraj or Indian Home rule) என்ற நூலிலே டோல்ஸ்டோயினதும், ரஸ்கினினதும் ஆழ்ந்த செல்வாக்கினை நாம் காண்கிருேம்.

'இதன் முடிவு வரை' என்ற நூலிலே தொழில்களின் மகத்துவம் பற்றியும் உடல் உழைப்பு, மூளை உழைப்பு என வேறுபடுத்திக் காண்பதன் தீங்கு பற்றியும், மனிதன் எத்தொழிலையும் அதன் மதிப்பினை உணர்ந்து ஆற்ற வேண்டுவதன் அவசியம் பற்றியும், எளிமை வாழ்வின் உயர்வு பற்றியும் தத்துவரீதியான ஆராய்வுகளும், முடிவுகளும் தரப்படுகின்றன. பிற்காலத்திலே கைத்தறி நெசவு, குடிசைக் கைத்தொழில்கள் பற்றிய அவசியத்தை வலியுறுத்தவும், தென்னுபிரிக்காவில் அத்தகைய எளிய வாழ்வினை வாழ்ந்து தம்மை ஆயத்தம் செய்து கொள்ளவும், 'இதன் முடிவு வரை' என்ற நூலே காந்திக்குத் துணையாயிற்று என்பதுண்மை.

மகாத்மா காந்தி என்ற வரலாற்று நூலிலே, காந்தியடிகளின் நூல் வாசிப்புப் பற்றித் திரு. பி. ஆர். நந்தா குறிப்பிடுவது, ஈண்டு நோக்கத் தக்கது. "நூல்களை வாசிப்பது என்பது காந்தியைப் பொறுத்த வரையில், எமக்கமைந்தது போல ஒரு பொழுபோக்கன்று. அவர் எக்காலத்திலும் எந்நூலையும் வாசித்ததில்லை; படித்துப் பயன் செய்வதே அவர் வழக்கம்."

ஆதாரநூல் : Mahatma Gandhi A Biography — By B. R. Nanda.
ii. பகவத் கீதை — ஆனந்தன்.

'தேனீ'

# அன்னை கஸ்தூரிபாவின் அரும்பணி

ருஷ்ய ஞானியும், மகாத்மாவின் எளிமை வாழ்விற்கு வழிகாட்டியுமான டோல்ஸ்டோயியின் இல்வாழ்க்கை, ஒரு நரகம். அவரின் மனைவி சோன்யா, கணவனோடு சண்டை பிடியாத நாளே கிடையாது. ''எங்கள் சண்டை எங்களின் மரணம்வரை தொடரும்'' இவ்வாறு டோல்ஸ்டோய் தமது விரக்தியை ஒரு சந்தர்ப்பத்தில் வெளியிட்டார்.



ஆனல் மகாத்மாவைப் பொறுத்தவரையில் இல்வாழ்க்கையானது அமைதியும், ஆனந்தமும் நிறைந்ததாய் விளங்கியது. இருவருக்கும் சமவயது. எனினும் கஸ்தூரிபா தம் கணவரை வாழ்க்கைப்பங்காளியாகக் கருதாது தெய்வமாகவே போற்றிவந்தார்; இளம் பருவத்திலிருந்து தமது ஆசைகளையெல்லாம் கணவரின் தியாகவேள்வியில் ஆகுதியாய் வழங்க அவர் தவறியதில்லை. அவர் இந்து தர்மத்தின் பெண்மைக்கு ஓர் இலட்சிய வடிவமாய் விளங்கினர்;

தென்னுபிரிக்காவில் காந்திஜி வாழ்ந்துகொண்டிருந்த பொழுது அவர் வீட்டில் ஒரு நண்பர் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். அவரின் அறையிலே வைக்கப்பட்டிருந்த மலபாண்டத்தினைக் கஸ்தூரிபாவே சுத்தம் செய்தல் வேண்டும் என்று கணவர் கட்டளையிட்டபொழுது, கஸ்தூரிபா அதற்கு மறுத்தார். கோபம் கொண்ட காந்திஜி, கஸ்தூரிபாவை வீட்டிற்கு வெளியிலே கொண்டு விட்டுக் கதவைப் பூட்டிவிட்டார். அப்போது கஸ்தூரிபா அழுதழுது சொன்னதாவது: ''இப்படி நீங்கள் என்னை வெளியிலே பிடித்து விட்டால் நான் எங்கே போவது? உங்களை விட்டால் எனக்கு யார் கதி?'' இதன்பின் நடந்ததைச் சொல்லவேண்டியதில்லை.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடக்கத்திலே தமக்குப் பிடியாத காரியங்களைக் காந்திஜி செய்யும்படி வற்புறுத்தும்பொழுது, கஸ்தூரிபா எதிர்ப்புக் காட்டினுலும், இறுதியில் கணவனுக்கு அடிபணிந்து அவரின் துணைவியாக மாறுவதே வழக்கமாயிருந்தது. ''ஆரம்பத்தில் வெகுளி, பின்பு எதிர்ப்பு, அடுத்து அதனை ஏற்றல், பின் அக்குறிக்கோளுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து உண்மையாக நடத்தலே கஸ்தூரிபாவின் வாழ்க்கை'' என்று பி. ஆர். நந்தா ஓரிடத்தில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமது மனைவியைப்பற்றி மகாத்மாவே பின்வருமாறு கூறுகின்றுர்: ''அஹிம்சைத் தத்துவத்துக்கு விளக்கத்தை என்னுடைய மனைவியிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். கணவனுடைய ஆதிக்கத்தை உறுதியுடன் எதிர்த்தாலும், கணவனே தெய்வம் என்னும் மனப்பான்மையுடன், அவள் என்னுடைய ஆணவத்துக்கும், செயல்களுக்கும் அடிபணிந்து கஷ்டங்களைப் பொறுமையுடன் ஏற்றுச் செயலாற்றினுள். ஆணுக்குப் பெண் அடிமை என்ற ஆணவத்துடன் செயலாற்றுவது தவறு என்பதை நாளாவட்டத்தில் உணர்ந்து வெட்கம் அடைந்தேன். அவளுடைய சகிப்புத் தன்மைதான் எனக்கு விழிப்பு அளித்தது. அஹிம்சைத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதற்கு அவள்தான் எனக்கு வழிகாட்டி.''

*1944* பெப்பிரவரி *22* ஆந் தேதி சிவராத்திரி இரவொன்றில் அன்னை, கணவரின் மடியிலே தலைவைத்தபடி உயிர்நீத்தார். கலக்கமேயறியாத காந்திஜியின் கண்களும் கலங்கின. ஆடாத அவரின் உள்ளமும் ஆடிப்போயிற்று. அறுபது ஆண்டுகள் புயலிலும், அமைதியிலும் கணவரின் அடிகளிலே இருந்து ஆறுதல் தந்த உயிர்த்துணையினை இழந்தால், யார் உள்ளந்தான் கலங்காது?

இராமனுக்கு ஒரு சீதை, இராமகிருஷ்ணருக்கு ஒரு சாரதாதேவி, காந்திஜீக்கு ஒரு கஸ்தூரிபா.

ஆதாரம்: Mahatma Gandhi — A Biography — B. R. Nanda.

கல்கி — 5-10-1969.

* * *

**துன்பத்தில் மனம் கெடாது, இன்பத்திலே ஆவலற்று, பயத்தையும் கோபத்தையும் நீக்கியவன் முனி என்றும், உறுதியான அறிவுடையவன் என்றும் சொல்லப்படுகிருன்.**

— பகவத் கீதை.

# காந்தியடிகளின் அறிவுரைகள்

## 1. பிரம்மச்சரியம்

பிரம்மச்சரியம் என்பதற்கு, கடவுளைக் காண்பதற்கு வழி செய்யும் வாழ்க்கை என்பது பொருள். புலனடக்கத்தைக் கைக்கொள்ளாமல் கடவுளைக் காண்பது சாத்தியமல்ல.

பிரம்மச்சாரி யென்றால் அவன் ஒரு ஸ்திரீயையும் சகோதரியைக்கூட ஒரு காலும் தொடவே கூடாது என்பது அர்த்தமல்ல. அவ்வாறு தொடும்போது ஒரு சாதாரண காகிதத் துண்டைத் தொடும்போது எத்தகைய உணர்ச்சி உண்டாகிறதோ, அதே போன்ற உணர்ச்சிதான் இருக்க வேண்டும்.

நாவை அடக்காதவன் காமத்தைக் கட்டுப்படுத்த முடியாதென்பது எனது உறுதி. சுவையை அடக்குவது எளிதான காரியமல்ல. ஆனால், காமத்தை அடக்குவதற்குச் சுவையையும் அடக்கியே தீரவேண்டும்.

உடலை மட்டும் பிடிவாதமாகக் கட்டுப்படுத்திக் கொள்வது பிரம்மச்சரியமாகி விடாது. பஞ்சேந்திரியங்களையும் அடக்குவதுதான் பிரம்மச்சரியம். மனம், செயல், சொல் மூன்றிலும் காமத்தைத் தவிர்த்து வாழ்வதே பிரம்மச்சரியம்.

சிற்றின்பம் என்பது மனித வாழ்க்கைக்கு அவசியமான ஒரு தேவையென்று கூறுவது முற்றிலும் தவறாகும். ஏனெனில். சிற்றின்பத்தை அறவே ஒழித்த பல மகா புருஷர்கள் உலகின் பல நாடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆதலால், மனித சமூகத்தில் பெரும்பான்மையோரால் இந்தச் சுகத்தை நிவிர்த்தித்து வாழமுடியும் என்பதை மறுக்க முடியாது.

பிரம்மச்சரியத்துக்கு வெளி உதவிகளுள் உபவாசமும் ஒன்று. உணவுவகைகளைத் தெரிந்தெடுத்தலும், உணவுக் கட்டுப்பாடும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உபவாசமும் அவசியமானது.

ஆரோக்கியத்திற்கான வழிகள் பல. அவையாவும் முக்கியமானவையே. ஆனால், மற்றெல்லாவற்றையும் விட அவசியமானது பிரம்மச்சரியம்.

## 2. தீண்டாமை

ஹிந்து சமயம் அழிக்க முடியாததான ஒரு பெருங் களங்கத்தைத் தன்னிடம் வைத்திருக்கிறது. தீண்டாமை அனாதிகாலந் தொட்டு நமக்கு வந்துகொண்டிருக்கிறது என்று கூறப்படுவதை நம்ப நான் மறுத்து வருகிறேன். அது நமக்கு ஒரு சாபக்கேடு என்றே எனக்குத் தோன்றுகிறது.

நான் மீண்டும் ஜென்மம் எடுப்பதானால், 'தீண்டாதவ'னாகவே பிறக்க வேண்டும்.

'தீண்டாதா'ருக்கு நான் செய்யும் சேவை முற்றுப்பெருமல், என் ஹிந்து தருமம் பூரணமடையாமல் நான் இறந்துவிட நேருமாயின், என்னுடைய ஹிந்து தருமம் பூரணமாக நிறைவேறும்படி செய்வதற்காக, நான் 'தீண்டாதா'ரிடையே பிறக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

தீண்டாமையை அகற்றும் விஷயமாக என் முயற்சி, எனது உயிரின் ஒரு முக்கியமான அம்சம்! நான் வாழ்வதும், இருப்பதும், நடமாடுவதும் ஹிந்து மதத்திலிருந்து இந்தச் சாபக்கேட்டை ஒழிப்பதற்காகத்தான்.

நம்மைவிடச் சிலர் தாழ்ந்தவர்கள் என்று நாம் நினைக்கும்போது, நம்மிடம் தீமைக் குணமே ஓங்கி நிற்கிறது. இந்தத் தீமையை நாம் விட்டொழிக்காவிட்டால், அது நம்மை விழுங்கிவிடும். பிராயச்சித்தம் செய்வதற்குக்கூட ஒரு ஹிந்துவும் இருக்கமாட்டான்.

ஹிந்து மதம் உண்மையில் தீண்டாமையை ஆதரிக்கிறது என்பதை நான் அறிவேனுயின், பின்னர் ஹிந்து மதத்தையே விட்டுவிட நான் தயங்கமாட்டேன். தீண்டாமை ஹிந்து மதத்தின் ஓர் அம்சம் என்பதை நான் நம்பாததால், ஹிந்து மதத்தை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன்.

தீண்டாமை விஷயத்தில் என் மனத்தைச் சமாதானப்படுத்திக்கொள்ள என்னுல் ஒருபோதும் இயலவில்லை. அதை நான் ஹிந்து மதத்தில் படர்ந்துள்ள ஒரு புல்லுருவியாகவே கருதுகிறேன்.

## 3. புலனடக்கம்

புலனடக்கம் இல்லாமல் ஆணே பெண்ணே உய்யமுடியாது. புலன்களின் மீது கட்டுப்பாடில்லாமல் இருப்பது திசை காட்டும் கருவியில்லாத கப்பலிற் பிரயாணம் செய்வதைப் போல் ஆகும்; எதிர்ப்பட்ட முதலாவது பாறையிலேயே மோதி அது தூள் ஆகிவிடும்.

பசியைத் தணிப்பதற்காகத்தான் சாப்பிட வேண்டும்; ருசியைத் திருப்தி செய்வதற்காகவல்ல. புலன் நுகர்ச்சியில் ஈடுபட்டவன் சாப்பிடுவதற்காகத்தான் வாழ்கிருன். புலனடக்கமுள்ளவன் வாழ்வதற்காகச் சாப்பிடுகிருன்.

மனித சமூகத்தைக் கடைத்தேற்ற வந்த மகான்கள் அனுஷ்டித்து நமக்குத் தரப்பட்டுள்ள 'புலனடக்கம்' என்ற புனிதச் செல்வத்தை நாம் அனைவரும் பங்கிட வேண்டும். உலகில் தோன்றிய பெரியோர் பலர் ஆரத் தீர ஆராய்ந்து கண்டுபிடித்த பெரிய உண்மை எது? 'புலனடக்கம்' என்பதுதான் எல்லா மகான்களும் வற்புறுத்திய உண்மையாகும்.

கெட்ட எண்ணங்கள் என்று ஏதோ இருப்பதாகவே கருதாது, எதிரேயுள்ள காரியங்களில் சிந்தையைச் செலுத்திக் கடமைகளைச் செய்யப் பயில வேண்டும்; ''சும்மாவிருக்கும் கைகள் விஷமத்தைத் தேடியலைவன'' என்பது பழமொழி. ஆதலால், நாம் முதலிலேயே ஒரு காரியத்தில் ஈடுபட்டுவிட்டால் கெட்ட எண்ணங்களுக்கும் நேரம் கிட்டாதல்லவா? அவனை இச்சை என்னும் பேய் ஒருபோதும் அணுகாது.

தொகுப்பு: திரு. சி. பரமானந்தம்.

# 4. சமூகம்

மக்களுக்குப் பணி செய்வதில் கடவுளைக் காண நான் முயற்சி செய்து வருகிறேன். ஈசன் மேலே எங்கேயோ வானுலகத்தில் இருக்கிருன் என்ருவது, அல்லது கீழே எங்கேயோ பாதாளத்தில் இருக்கிருன் என்ருவது சொல்லுவது மடமை. நாம் அறியும் ஒவ்வோர் உயிரிலும் அவன் இருக்கிருன்.

பொருள் இருந்தாற்ருன் உலகத்துக்குப் பணி செய்யமுடியும் என்று எண்ண வேண்டாம். ஏசுகிறிஸ்து, நபி முகம்மது, புத்தர், நானக், கபீர், சைதன்யர், சங்கரர், தயானந்தர், ராமகிருஷ்ணர் உலகத்துக்குப் பணி செய்தார்கள் அல்லவா? எவ்வளவு பெரிய அளவில் செய்திருக்கிருர்கள்? இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் இவர்கள் தோன்றியதே பெருஞ்செல்வம் என்று உலகம் கருதுகிறது. இவர்கள் அனைவரும் செல்வத்தைத் துறந்து மறுமையையே நன்மையாகக் கருதி வாழ்ந்தார்கள்; கட்டாயத்தில் அல்ல, சுயமாகவே அப்படிச் செய்தார்கள்.

கோடிக் கணக்கானவர்களுக்கு இல்லாததை நாமாகவே வேண்டாம் என்று துறந்துவிடவேண்டும். இதுதான் நியாயமும் தர்மமுமாகும். ஆனுல், அப்படித் துறப்பது எளிதல்ல. அதற்கு வேண்டிய மன உறுதி திடீர் என்று ஒருவனுக்கு வந்துவிடாது. பயிற்சி செய்தல் வேண்டும்.

வேள்வி செய்யாமல் உண்பவன் திருட்டுச் சோறு உண்கிருன். சமூகத்தினுடைய உதவியால் ஒருவனுக்கு வயிருர உண்ண உணவு கிடைக்கிறது; அந்த உணவை உண்பவன் தன்னுல் இயன்றதைச் சமூகத்துக்குச் செய்துதர வேண்டும்.

தரித்திர நாராயணன் என்பது இறைவனுக்குரிய கோடிக்கணக்கான நாமங்களில் ஒன்று. அதனுடைய அர்த்தம் என்னவென்ருல் ஏழைகளின் கடவுள் அதாவது ஏழைகளின் உள்ளத்தில் தோன்றும் கடவுள் என்பது.

நான் ஒரு சமத்துவ நிலையை உண்டாக்க விழைகின்றேன். இத்தனை நூற்ருண்டு காலமாக உழைப்பாளிகள் கீழ்நிலைக்கு ஒதுக்கப்பட்டார்கள். அவர்கள் சூத்திரர் என்று அழைக்கப்பட்டார்கள். இச்சொல் மிகவும் கீழ்நிலையைக் குறிக்கிறது. ஒரு நெசவுத் தொழிலாளியின் மகனுக்கும், உழவனது மகனுக்கும், உபாத்தியாயரது மகனுக்கும் எந்தவித பேதமும் இருக்கக் கூடாது என விழைகின்றேன்.

அதிகாரம் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, தண்டனைக்குப் பயந்து பெறப்பட்டது. மற்றது, அன்பால் பெறப்பட்டது. அன்பின் அடிப்படையில் எடுத்த அதிகாரம் ஆயிரம் மடங்கு பயனுள்ளது. நிரந்தரமானதுமாகும்.

அரசியற் கலப்பின்றிச் சமூகசேவை ஆற்றமுடியாது என்றதைக் கண்டுதான் நான் அரசியலில் இறங்க வேண்டியிருந்தது. அரசியற் சேவையைச் சமூக ஒழுக்க வளர்ச்சியின் கண்கொண்டு காணவேண்டும். ஜனநாயகத்தில், வாழ்க்கையில் எந்த விடயமும் அரசியற் கலப்பின்றி அமையாது.

பசியில் வாடும் மக்களுக்கு எது உணவு தருகிறதோ அதில்தான் நான் அழகையும் காண்கிறேன். முதற் கடமை அவர் பிழைப்புக்கு வழிகாட்ட வேண்டும். பிறகு கலைகளும் அவற்றின் மகிழ்ச்சியும் அழகும் தாமாகத் தோன்றும்.

தொகுப்பு: திரு. ஐ. பொன்னம்பலம்

# காந்தியின் நகைச்சுவை

"நகைச்சுவை யுணர்வு மட்டும் எனக்கு இல்லாதிருக்குமானுல் நான் என்ருே தற்கொலை செய்துகொண்டிருப்பேன்." — காந்திஜி.

## ஏரவாடாவிலே உருவான கத்தி

காந்திஜி 1930 இல் ஏரவாடாச் சிறையிலே கைதியாயிருந்தார், அவருக்கு ஒரு கத்தி தேவைப்பட்டது. அத்தேவையை நிறைவு செய்யச் சிறையிலுள்ள பட்டறையிலேயே, ஒரு கத்தியைச் செய்து அவருக்கு வழங்கினர். அவசரம் அவசரமாகச் செய்யப்பட்டமையால் கத்தி நன்முறையில் அமையவில்லை. இது சம்பந்தமாகச் சிறைத் தலைவருக்கும், காந்திஜிக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் பின்வருமாறு :

காந்திஜி : இதுதான் உங்கள் பெருமைக்குரிய தொழிற்றிறன் போலும்.

தலைவர் : நீங்கள்தாம் சுதேசிப் பொருள்களே வேண்டும் என்று வற்புறுத்துபவராயிற்றே!

காந்திஜி : அது உண்மை. ஆனுல், நன் ஏரவாடாவில் செய்யப்படும் பொருள்கள் என்று சொல்லவில்லையே !

—டொக்டர் சுசீலா நய்யார்.

## சிறையிலேயே சவ அடக்கம்

காந்திஜி சிறையில் இருந்தபொழுது பத்திரிகைக்காரர் ஒருவர் அவரை நிழற்படம் எடுக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். அப்பொழுது காந்திஜி சொன்னதாவது ; "நான் சிறையிலேயே இறந்து, இங்கேயே அடக்கம் செய்யப்படல் வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா ?"

— திரு. எஸ். துரைராஜசிங்கம்.

## திருமண விருப்பம்

ஒரு தடவை காந்திஜிக்குச் சீனர் ஒருவர் ஒரு பட்டுச் சால்வையை வழங்கினர். அது மிகவும் அழகாக, மனத்தைக் கவரும் வேலைப்பாடுகள் கொண்டதாக இருந்தது. அதை இரசித்த காந்திஜி சொன்ஞர், "இத்தகைய ஓர் அழகான சால்வையை நெய்யக்கூடிய பெண் சீனுவில் இருப்பாளாஞல், நான் என் முதிய வயதையும் மறந்து அவளை மணஞ் செய்யவே விரும்புவேன்."

— திரு. எஸ். துரைராஜசிங்கம்

ஆதாரம் : Gandhiji — the ever smiling Mahatma.

## "Characteristic, Inimitable, Toothless Smile"

[If anyone now living in Jaffna can claim that he had Mahatma Gândhi's life in his hands, it is Mr. S. Balasubramaniam, Proctor S. C., the former Secretary of the Jaffna Municipal Council. During the Mahatma's whirlwind tour of Jaffna in 1927, he was at the wheel of 'his' car driving as only an exhuberantly youthful dare-devil 'devotee' can do. The following excerpts from an article by Mr. Balasubramaniam published in **Gandhiji — the ever smiling Mahatma** give us vivid glimpses of a man whose philosophy and way of life have meant so much to the writer. — *Ed.*]

It was the 26th day of November 1927. This was the day of days for the people of Jaffna. On this glorious day, the apostle of *ahimsa* and *satya* was scheduled to arrive in Jaffna.......

As a trusted lieutenant of Proctor Coomarasuriar of the Gandhi Reception Committee, it fell to my happy lot to be in constant touch with Mahatmaji and his followers during their never-to-be forgotten sojourn in Jaffna, *i. e.* from the morning they reached the Jaffna Station to the evening when they bade adieu to Jaffna.......

The most famous physician of his day, Kasturiar Muttukumaru lent me his swell sedan car for the use of Mahatmaji and his party during their stay in Jaffna. The car tastefully decorated (and with me as the chauffeur) received Mahatmaji...... All along the route flags and festoons in between triumphal arches and pandals flew in the air and men, women and children by their hundreds lined up the route some 10 to 12 deep on either side of the road. At the Archway Entrance of the Dharma Lakshimi Vasam......there stood a Purna Kumbam to receive Mahatmaji, Ma Kasturbai, Rajaji, Selvi Lakshmi Rajagopalachariar, Sri Mahadev Haribai Desai (Mahatmaji's Secretary), Sri Pyarelal (second Private Secretary), Acharya D. B. Kalelkar and other followers who accompanied him on his Ceylon Pilgrimage......

The Lakshimi Vasam during those four glorious days was a "de facto" Temple where hundreds of the Jaffna citizenry, young or old, rich or poor of all castes and creeds flocked to obtain a Dharsan of Mahatmaji. A band of volunteers of young men like Sri S. H. Perinpanayagam, Sri K. Navaratnam, Sri Sivagurunathar (now virtually a Khadhi Sannyasin......) and my humble self headed by Sri S. Coomarsuriar and under the direct supervision of the Hon'ble W. Duraiswamy took charge of receiving the hundreds of 'pilgrims'...... I was then in my youthful energy and enthusiasm a very fast driver and Mahatamaji had occasion to check me more than once and finally he gave me lovingly his parting advice to give up driving cars, and I have not driven a car since.

......I accompanied Bapuji in his walks. To keep pleasant company I had my chit-chat with him in Tamil and he did not seem to have any difficulty to converse with me in Tamil......he informed me *inter alia* that *Thiruvachagam* and *Thirukkural* were two of his favourite books. Would that I had had a camera then which would have given me a souvenir of Bapuji striding round the ramparts towards the rising sun! Yet even now his figure dances before my very eyes!......

On my return to the Dharma Lakshmi Vasam......I found Swami Yogar of Columbuthurai waiting to see Mahatmaji. I introduced Rajaji to Swami Yogar. Rajaji, Sivaguruji and I took the Swami to Bapuji's room. As Monday was a day of silence to the Mahatma, he received the Swami with a smile and wrote down on a piece of paper that he had heard all about the Swami from Mr. W. Duraiswamy... and that day being a day of silence for him, he was prepared to answer in writing any questions put to him by the Swami. The Swami wanted to give him some fruits like apples which Mahatmaji declined to accept as they were of foreign origin (Videshi)......

I bade *au revoir* to Bapuji at the Jaffna Station on the 29th......and saw him again in Madras at the annual sessions of the Indian National Congress there in December 1927, but I had no occasion to talk to him beyond greeting him with folded palms when he recognised me with his characteristic, inimitable, toothless smile.

In 1929...... I went last to Ahmedabad and met Bapuji by appointment at Sabarmati Ashram......

I met Bapuji last in July 1947 during my study-tour of India from July to September. I was with him for only six short minutes though it was sufficiently long enough for me to get his blessings, for who knows premonition or providence took me to him to have my last dharsan before he attained peace through martyrdom at the hands of a fanatic Hindu assassin. Something within told me to meet him personally and warn him of my fears about what a mad Sindh Hindu or militantly aggressive Hindn Maha Sabha fanatic or lunatic might attempt to do as a result of losing all his lands in a vivisected India. Bapuji told me......he was prepared to do or die to save India's soul......I took the 'dust' of or off his feet and then prostrated myself in front of him. He patted me on my bald dome and blessed me. I removed myself reluctantly from his presence musing of his infinite tenderness, unfathomable love, unruffled serenity, indomitable spirit, undaunted courage, absolute fearlessness and matchless heroism.

* * * *

*"Man as animal is violent, but as spirit he is non-violent. The moment he awakes to the spirit within, he cannot remain violent. Either he progresses towards* **ahimsa** *or rushes to his doom" — Gandiji - Harijan, August 11, 1940.*

# நன்றி நவிலல்

இந்து இளைஞர் கழகம் காந்தி நூற்றாண்டு விழாவினை ஒட்டி ஒரு மலர் வெளியிட வேண்டும் எனத் தீர்மானித்து, அம்மலரிலே விளம்பரங்களை வெளியிடாது நிதியுதவியோர் பெயர்களையும், முகவரிகளையும் மட்டுமே வெளியிட முன் வந்தபோது, அந்நோக்கத்தினை வரவேற்று, தாராள மனத்துடன் நிதியுதவி புரிந்த பின்வரும் வர்த்தகப் பிரமுகர்களுக்கு எமது நன்றி உரியதாகுக.

1. திரு. கனகசபை கைலாயநாதன் J. P., வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
2. 'மில்க் வைட் சோப்' ஸ்தாபனத்தினர், யாழ்ப்பாணம்.
3. ஸ்ரீ சண்முகநாத அச்சக உரிமையாளர், யாழ்ப்பாணம்.
4. ஏ. கே. எஸ். நகை மாளிகையினர், யாழ்ப்பாணம்.
5. 'நண்பர்', $\frac{236}{4}$ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
6. நல்லூர் 'றேடர்ஸ்' அரசடி, யாழ்ப்பாணம்.
7. திரு. செ. காசிப்பிள்ளை, காசிப்பிள்ளை அன்ட் கோ., 82, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
8. திரு. ச. கிருஷ்ணசாமி, 33, பெரியகடை, யாழ்ப்பாணம்.
9. 'நண்பர்', நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
10. கே. என். எம். மீரான் சாயபு, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
11. திரு. M. T. C. பத்மநாதன், அதிபர், சந்திரா பெனியன் தொழிற்சாலை, 46, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
12. அதிபர், திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.
13. ஐ. சின்னத்துரை அன்ட் சன்ஸ், 13, பசார் லேன், யாழ்ப்பாணம்.

<u>முதற் பிரதி பெறுபவர்:</u> **திரு. த. சண்முகலிங்கம் அவர்கள்**
தொழில் அதிபர், Northern Industries Jaffna.
தலைவர் — உள்ளூர் ஆட்சி மன்றம்.

* * *

## முயன்று பாருங்கள்

### விடை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ, | 2. இ, | 3. இ, | 4. ஆ, | 5. அ, |
| 6. ஆ, | 7. இ, | 8. அ, | 9. அ, | 10. ஆ, |
| 11. ஆ, | 12. ஆ, | 13. இ, | 14. ஆ, | 15. ஆ, |
| 16. இ, | 17. ஆ, | 18. அ, | 19. ஆ, | 20. இ, |
| 21. இ, | 22. ஆ, | 23. இ, | 24. ஆ, | 25. அ, |

* சத்தியமே அடைவதற்குரிய இலக்கு. அஹிம்சை அதனை அடையும் வழி.
* சத்தியமே கடவுள்.
* அழகு. சத்தியத்தோடும், நன்மையோடும் பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளது.
* வாழ்வதே ஒரு கலைதான்.
* கைராட்டையின் சக்கரச் சுழற்சியிலே சங்கீதம் பொதிந்திருக்கிறது.
* உண்மையைப் பார்க்க உதவும் கண்ணாடியே கலையாகும்.
* மனிதன் சத்தியத்திலே அழகைக் காணத் தொடங்குகையில் உண்மைக் கலை உதயமாகின்றது.

---

உ

## யாழ் இந்துக் கல்லூரி

# இந்து இளைஞர் கழகம்

அலுவலர் 1969

அதிபர்:
திரு. ந. சபாரத்தினம்

புரவலர்:
திரு. க. சிவராமலிங்கம்

துணைப் புரவலர்கள்:
திரு. இ. மகாதேவா, தீரு. சி. செ. சோமசுந்தரம், திரு. க. சொக்கலிங்கம்


தலைவர்:
செல்வன் க. குமரேசன்

துணைத் தலைவர்:
செல்வன் அ. யோகேஸ்வரன்

செயலர்:
செல்வன் இ. கருணாநிதி
செல்வன் ம. சிவகுமார்

பொருளர்:
செல்வன ஐ. கயிலைநாதன்

செயற் குழுவினர்:
செல்வர்: அ. உமாசங்கர், பொ. ஸ்ரீஸ்கந்தராசா, சி. ரகுநாதன், மு. குமாரவேல், ஆ. பூபாலசிங்கம், சு. இந்திரநாதன், வே. சுகுமார், ஐ. பரமேஸ்வரன், இரா. கருணாமூர்த்தி, கு. நந்தகுமார், ச. சண்முகம், சி. சத்தியலிங்கம்.



'With folded arms and steady eyes
And little fear and less surprise
Look upon them as they slay
Till their rage had died away.'

— *Shelley.*

'கொல்லவரு வோர்முன்னே உன்விழியை நிறுத்திக்
குவிந்திடுநற் கரத்தோடும் அச்சத்தைப் போக்கி
நில்லவர்கள் வெகுளிமடிந் திடுகின்ற வரையும்
நினைவந்து திகைப்பென்றும் அடையாத வண்ணம்'

---

'காந்தி மலர்' யாழ். இந்துக் கல்லூரி, இந்து இளைஞர் கழகத்திற்காக, திரு. க. சிவராமலிங்கம் அவர்களால் 10-10-69இல், ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.